இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-18 | 03-12-2005 | சனிக்கிழமை | ஓசை-289

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx
Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835
(சி-13509)

# இளைஞர்கள் படுகொலையைக் கண்டித்து யாழ். குடாநாட்டில் நேற்று பூரண ஹர்த்தால்

## படையினர் பொதுமக்கள் முறுகல்

(யாழ்ப்பாணம்)

**நீர்வேலியில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் இரு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்த அழைப்பினை ஏற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக யாழ். குடாநாடு நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.**

நேற்று முன்தினமிரவு 8.00மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அண்மையாக உள்ள தேநீர்க் கடையில் நின்று தேநீர் அருந்திக்கொண்டு இருந்த மூவர் மீது,ஆட்டோவில் வந்த இராணுவப் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் அந்த இடத்திலேயே மரணமடைந்ததுடன் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றும் வருகின்றமை தெரிந்ததே. இதனை தேசவிரோத சக்திக

(14 ஆம் பக்கம் பார்க்க)



இளைஞர்கள் படையினர் முறுகல்



## சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை அலுவலகத்தை சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் மாணவர்கள், இளைஞர்களால் விரட்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் முன்னால் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கூடிய இராணுவத்தினரை மாணவர்களும் இளைஞர்களும் அந்த இடத்திலிருந்து விரட்டியடித்துள்ளனர். நேற்று முன்தினமிரவு நீர்வேலியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விட்ட வேளையில் இராணுவத்தினர் சர்வதேச மாணவர் பேரவையை சுற்றி வளைக்க முயன்றதைத் தொடர்ந்தே இராணுவத்தினர் மாணவர்கள் மற்றும் இளைஞர்களினால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாகத் தாக்குதல்கள் 5 சிறிலங்காப் படையினர் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்று பரவலாக சிறிலங்காப் படையினர் மீதான தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் குறைந்தது ஐந்து படையினர் காயமடைந்துள்ளனர். தாக்குதல்கள் நேற்றிரவும் தொடர்ந்ததாக கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். சாவகச்சேரியில் நேற்றுவெள்ளிக் கிழமை நடத்தப்பட்ட மூன்று தாக்குதல்களில் மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசசபைக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவ முகாம் மீது பிற்பகல் 1.30 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களால் முதலாவது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் விநியோக அணி நாவற்குழியில் தடுத்து நிறுத்தம்!

### முயற்சி கைகூடாது படையினர் முகாம் திரும்பினர்

நாவற்குழியில் சிறிலங்காப் படையினரின் விநியோக வாகன அணி அப்பகுதி இளைஞர்களால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது.

மறவன்புலோ இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி நேற்றுக்காலை புறப்பட்டு வந்து கொண்டிருந்த நான்கு தொடர் விநியோக வாகன அணியை நாவற்குழிச்சந்தியில் வைத்து அப்பகுதி இளைஞர்கள் பாதைகளில் தடைகளை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தினர். இளைஞர்களின் கடும் எதிர்ப்பினை சமாளிக்க முடியாமல் படையினர் அப்பகுதியில் மூன்று மணிநேரம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தேசவிடுதலைப் பற்றாளர்களை அழிக்கும் செயல் தொடராதிருக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

### யாழ்.மாவட்ட அரசியல்துறை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தேசவிடுதலைப் பற்றாளர்களை அழித்தொழிக்கும் நயவஞ்சக செயல்களை வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் தொடராது இருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட அரசியல்துறை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தொலைபேசி ஊடாக யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி விடுத்த அவரச வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த 30ஆம்,1ஆம் திகதிகளில் பளையிலும், கிளிநொச்சியிலும், யாழ் மாவட்ட மற்றும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பை மேற்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் 6 இல் சரத்பொன்சேகா இராணுவத்தளபதியாகப் பதவியேற்பு



(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பதவியேற்கவுள்ளார். சிறிலங்கா இராணுவத்தினது ஓய்வு வயதை உயர்த்தி முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிறப்பித்திருந்த வர்த்தமானி அறிவித்தலை மகிந்தராஜபக்ஷ அரசு இரத்து செய்துள்ளது.இதனால் நவம்பர் ஐந்தாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் மீசாலையில் இளைஞர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.நேற்று வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணியளவில் தென்மராட்சி மீசாலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த இளைஞர் கே. குபேரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பாவனைக்குதவாத கோதுமை மா கொழும்பிற்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு

கொழும்பிலிருந்து, பரந்தன் உலக உணவுத்திட்ட மாவட்ட உணவுக் களஞ்சியத்திற்கு வந்தடைந்தகோதுமை மா மக்களின் பாவனைக்குதவாத நிலையில் மா மூடைகளை மீண்டும் கொழும்பிற்கு திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றதாகத் தெரியவந்துள்ளது.மேற்படி விடயம் தொடர்பாக மேலும்தெரிய வருகையில்; நேற்றையதினம் ஒரு பாரவூர்திமூலம் 330 மூடை கோதுமை மா கொழும்பிலிருந்து, பரந்தனில் அமைந்துள்ள மாவட்ட உலக உணவுத்திட்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடாத்தப்படும் பரீட்சை
**Srilankan Computer Driving Liecence**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
**வின்நெற் கணனி பயிற்சி நிலையம்**
**டிப்போ வீதி, கிளிநொச்சி (சி.13074)**

### தவறிவிட்டது.

தாமோதரம் கிருஸ்ணகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதி அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் விசுமடுவிற்கும் ஆனையிறவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறனர். சன்மானம் வழங்கப்படும். (7071)

### காணவில்லை

K.V. குறியுடைய சிவப்பு நிறம், தலையில் கறுப்பு நிறமுடைய எருது மாட்டை 20 நாட்களாகக் காணவில்லை. இது பற்றி அறிந்தவர்கள் கீழ்வரும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். சி.கோபலபிள்ளை, நாவலர்வீதி, வட்டக்கச்சி. (7072)




வட்டுக்கோட்டையில் சிந்துபுரம் பொதுச்சந்தைக்கான பெயர்ப்பலகை அண்மையில் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# வவுனியா மாவட்டத்தில் “பார்த்தீனியம்” பரவுகிறது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பார்த்தீனியம் செடியின் பரம்பல் அதிகரித்துள்ளது.

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பெரிய தம்பனை மகாவித்தியாலய வளாகத்தில் இச்செடியின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுகின்றது.இச்செடியின் பரம்பலைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (40)

# நிவாரணமோசடி விசாரணைக்கு உதவ சட்ட உதவி ஆணைக்குழு தீர்மானம்

சுனாமி நிவாரணங்களில்மோசடிகள் இடம்பெற்றமை தொடர்பாக விசாரணைகளை நடத்தும் நடவடிக்கைகளுக்கு உதவ சட்ட உதவி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. சுனாமி பேரலை தாக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக கிடைத்த பொருட்கள் மற்றும் நிதிகள் மோசடி செய்யப்பட்டதாக அண்மைகாலமாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இந்த விடயம் தொடர்பாக தகவல்களை அறிந்து கொள்வதற்காக பயிற்சியில் ஈடுபட்டுவரும் சட்டத்துறையினர் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்களை சந்தித்து தகவல்களை பெற்றுக்கொள்ளவுள்ளதாக சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ்.விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# ஆழிப்பேரலை புனரமைப்பில் தமிழ் முஸ்லிம் மக்கள் புறக்கணிப்பு

## கிளிங்டனுக்கு தமிழ் மக்கள் பேரவை மகஜர்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிவாரணம் மற்றும் புனரமைப்பு, புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதில் சிறிலங்கா அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளிங்டனிடம் சமர்பிப்பதற்காக ஐ.நா. அமைப்புப் பிரதிநிதிகளிடம் கையளித்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரை கிண்ணியாவுக்கு வந்த பில் கிளிங்டனிடம் நேரில் கையளிப்பதற்காக தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ. விக்னேஸ்வரன் கிண்ணியா சென்றிருந்தார். ஆனால், கிளிங்டனின் விஜயத்தை ஒட்டி கிண்ணியா பிரதேசத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததால் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனை பொலிசார் அனுமதிக்கவில்லை. பில் கிளிங்டன் உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பிய பின்னரே பாதுகாப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டன.

அதன் பின்னர் விக்னேஸ்வரன், கிண்ணியா விளையாட்டு மைதானத்தில் இருந்த ஐ.நா. அமைப்பின் இலங்கை முக்கியஸ்தர்களிடம் பில் கிளிங்டனுக்கு விலாசமிடப்பட்ட மகஜரை ஒப்படைத்து, அதனை கிளிங்டனுக்குக் கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

கடற்கோளினால் நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்தழிவு ஆகியவற்றில் சுமார் 60 சதவீதம் வடக்கு கிழக்கில் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நீங்கள் செல்வதை இலங்கை அரசு திட்டமிட்டு தடுத்து வருகிறது. பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிவாரணம் மற்றும் உதவிகள் பாகுபாடின்றி கிடைப்பதற்கு கடற்கோள் தொடர்பான பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமும் ஐநா. அமைப்பும் இலங்கை அரசுக்கு உணர்த்த வேண்டும் என்றும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. (25)

# குளவிசுட்டான் கிராமத்தில் சுழற்சி முறை கடனுதவி

நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் டென்மார்க் அகதிகள் பேரவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெடுங்கேணிப் பிரதேசத்தில் குளவிசுட்டான் கிராமத்தில் அண்மையில் தனிநபர் தொழில் விருத்திக்காக இருபது பயனாளிகளுக்கு தலா இருபதினாயிரம் ரூபா வீதம், சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் நெடுங்கேணி அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர், வெளிக்கள உத்தியோகத்தர்,சமூக வலுவூட்டாளர், கிராம அலுவலர், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள்,கடன் அனுமதிக்குழு உறுப்பினர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு கிளி/ கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் உதவி

வட்டக்கச்சி பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தின்போது இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கி வாழும் மக்களுக்கு கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் உதவிகள் புரிந்து வருகின்றனர் இதன் அடிப்படையில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள ஜொனிபுர மக்களுக்கும் சிவிச்சென்றர் பொது மண்டபம், நூலகம் ஆகிய இடங்களில் பன்னங்கண்டி, மருதநகரில் உள்ள மக்களுக்கும் கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் சமைத்த உணவுகளை வழங்கியுள்ளனர். (12)

# பூநகரி பிரதேச மக்களுக்கு வருமான அதிகரிப்பு கடன் வழங்கல்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான கடன் வழங்கும் நிகழ்வு பூநகரிப் பிரதேசத்திலுள்ள இரு வெவ்வேறு கிராமங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முதலாவது நிகழ்வு காலை 11.00 மணியளவில் மட்டுவில் நாடு என்னும் இடத்தில் சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கடன் வழங்கும் நிகழ்வின் முக்கியத்துவம் பற்றியும், அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் நிகழ்வில் கலந்துகொண்ட சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் செல்வி துஸ்யந்தினி கருத்துரை வழங்கியதைத் தொடர்ந்து சிறப்புரையினை உதவி அரசாங்க அதிபர் சிறீஸ்கந்தகுமார் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறியியலாளர், பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத் தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனரமைப்புச் செயற்றிட்ட இணைப்பாளர், வருமானத் திட்டக் கணக்காளர் ஆகியோர் உட்பட பலர் பயனாளிகளுக்கு கடன்களை வழங்கினர்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்காக ஒரு பயனாளிக்கு இருபதாயிரம் ரூபாவும், நெற் செய்கையை மேற்கொள்வதற்கு ஒரு பயனாளிக்கு தலா பதினைந்தாயிரம் ரூபா வீதம் 19 பயனாளிகளுக்கு இத்தொகை வழங்கப்பட்டது.

நெற்புலவுக் கிராமத்திலும் இதே கடன் வழங்கும் நிகழ்வு பிற்பகல் 3.00 மணியளவில் சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விலும் கருத்துரைகள், சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன. கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் செல்வி துஸ்யந்தினி, கிராம சேவையாளர் மாசிலாமணி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து கடன் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. நெற் செய்கைக் கடனாக ஒரு பயனாளிக்கு [illegible] (34)

# க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு 52,6629 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்

(நமது நிருபர்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் 378,702 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 147,927 பேருமாக மொத்தம் 526,629 மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இத்தேர்வுக்காக சேகரிப்பு நிலையங்கள் 33உம், இணைப்பு நிலையம் 526 உம், பரீட்சை நிலையங்கள் 3911உம், பரீட்சை ஆணையாளரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இத்தேர்வுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் 11 இணைப்பு நிலையமும், 33 பரீட்சை நிலையமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்து இணைப்பு நிலையமும், 29 பரீட்சை நிலையமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு சேகரிப்பு நிலையமும் செயற்படும். (34)

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சமாதானமும் சமத்துவமும் நிகழ்வு

(வவுனியா)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சமாதானமும் சமத்துவமும் என்ற நிகழ்வு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஷெல்ஸ் கலந்து கொண்டார். மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு சமாதானமும் சமத்துவமும் என்ற பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட படங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. மனித உரிமைகள் தினமாக டிசம்பர் மாதம் பத்தாம் திகதி ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.(21)

# இழைய வளர்ப்பு வாழைக்குட்டிகள் மன்னாரில் பயனாளிகளுக்கு வழங்கல்

மன்னார் மாவட்டத்தில் இழைய வளர்ப்பு மூலம் உற்பத்தியாக்கப்பட்ட வாழைக்குட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஹெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் இந்த வாழைக்குட்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

சுமார் நூற்றி ஐம்பது வாழைக் குட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

-அமெ.வில் 1000மாவது மரணதண்டனை நிறைவேற்றம்-

# மரணதண்டனைக்கு எதிராக உலகின் 380 நகரங்களில் ஊர்வலம்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் ஆயிரமாவது மரணதண்டனைக் கைதிக்கு நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதேவேளை மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து உலக நாடுகளின் 380 நகரங்களில் ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.**

ரோம் நகரின் கல்லோசியம், பிரசல்ஸ் நகரின் அடோமியம், மேட்ரிட் நகரின் சாண்டா அனா சதுக்கம், பீனஸ் ஏர்ஸ் நகரின் பெலிஸ்க் கட்டிடம், சாண்டியாக்கோ நகரின் மொனெடா அரண்மனை ஆகியவற்றில் ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

ரோம் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு எதிரில் மரண தண்டனைக்கு எதிர்ப்புத்தெரிவித்து 100பேர் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மரண தண்டணைக்கு ஆதரவு குறைந்து வருகிறது. கடந்தாண்டு மட்டும் ஐந்து வறிய நாடுகள் மரண தண்டணைக்கு தடை விதித்துள்ளன. இதன்மூலம் மரணதண்டணையை தடை செய்த நாடுகளின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் 1976ஆம் ஆண்டு முதல்தான் மரணதண்டணை விதிப்பது நடைமுறைக்கு வந்தது. கடந்த 30ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மரண தண்டணைகளின் எண்ணிக்கை ஆயிரத்தை அடைந்து விட்டது.ஆயிரமாவது மரண தண்டணை நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.வார்ஜீனியாவைச் சேர்ந்த ராபின் லோவிட் ஆயிரமாவது மரண தண்டணைக்கைதி ஆவார்.



பங்களாதேஷில் சமீபத்தில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலை எதிர்த்து 14 எதிர்க்கட்சிகளும், சட்டத் தரணிகளும் நேற்று முன்தினம் 12 மணிநேர நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தினர். பிரதமரை இராஜினாமாச் செய்ய வலியுறுத்தி தலைநகரில் பெண்கள் ஆவேசமாக கோசமிடுகின்றனர்.


# "மாவோ" தீவிரவாதிகளின் போர் நிறுத்தம் நீடிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தமது போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக தீவிரவாதிகள் போர் நிறுத்தம் அறிவித்து இருந்தனர். இந்த வார இறுதியுடன் போர் நிறுத்தம் முடிவடைகிறது. போர் நிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என்று வெளிநாட்டு அமைதிக் குழுவினரும் சேவை அமைப்புக்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்துக்கு தீவிரவாதிகள் நீடித்துள்ளனர்.

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மன்னர் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகிறார்கள். தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்தபோரில் இதுவரை 14ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பலியாகிவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு தமிழ்நாட்டில் மனித சங்கிலி விழிப்புணர்வு நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஒரு முதியவரைப் படத்தில் காணலாம்.

# உலங்குவானூர்தி விபத்தில் ஸ்பெயின் எதிர்க்கட்சித்தலைவர் காயம்

ஸ்பெயினின் எதிர்கட்சித்தலைவர் மரியானோரஜோல் பயணம் செய்த உலங்குவானூர்தி நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது. எதிர்க்கட்சித்தலைவர் சிறுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளார்.

பொலிஸ் நிலையம் ஒன்றிற்குச் சென்றிருந்த எதிர்க்கட்சிக் குழுவினர் அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கவென உலங்குவானூர்தி ஒன்றில் ஏறியுள்ளனர். கட்டடத்தின் மேல் பகுதியிலிருந்து உலங்கு வானூர்தி புறப்படுவதையும் படிப்படியாக அது மேலே செல்வதையும் சி.என்.என். தொலைக்காட்சி நிலையம் காண்பித்துள்ளது.

இருந்தபோதிலும் ஐந்து மீற்றர் உயரத்திற்கு மேலே சென்ற உலங்கு வானூர்தி திடீரென நிலத்தில் வீழ்ந்து சேதமடைந்துள்ளது.

அதிர்ச்சியடைந்த எதிர்க்கட்சித் தலைவர் உலங்கு வானூர்தியின் சிதைவுகளிற்குள்ளிருந்து வெளியே வருவதையும் சி.என்.என். படங்கள் காண்பித்துள்ளது. கொன்சவெட் கட்சியின் தலைவரும் 80 வயது நிரம்பியவருமான இவர் விரலில் ஏற்பட்ட முறிவு காரணமாக வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். விபத்துக்கான காரணங்களை அறியவென பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பாகிஸ்தானில் ஹிஸ்புல்லா இயக்கம் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்ப்பு

(லண்டன்)

பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் தீவிரவாத இயக்கங்களில் ஒன்றான ஹிஸ்புல்லா முஜாகிதீன் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்துள்ளது.

இதனால் அந்த அமைப்பின் சொத்துக்கள் வங்கிக்கணக்கில் முடக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே பலஸ்தீன ஹமாஸ் இயக்கம், பாஸ்க் இயக்கம் ஆகியவற்றை தடை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆர்ப்பாட்டம்

(டுபாய்)

பக்ரைன் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டத்தை எதிர்த்து இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி யுள்ளனர். இதன் போது ஏற்பட்ட கலவரத்தில் ஐந்துபேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பொலிசாரின் கார்களுக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தீவைத்தனர். கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டுகளையும் வீசி தாக்குதலையும் நடத்தியுள்ளனர்.

# கர்ப்பமாகும் பெண்களுக்கு ஊக்குவிப்பு வழங்கச் சட்டம்

(ரோம்)

இத்தாலியில் கர்ப்பமாகும் பெண்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்க சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இத்தாலி நாட்டிலே கருக்கலைப்புக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. கருக்கலைப்புக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் கருகலைப்பு சட்டத்தை கடுமையாக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

ரோமன் கத்தோலிக்க நாடான இத்தாலியில் கருக்கலைப்பை எந்த வகையிலும் அனுமதிக்கக் கூடாது என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. கருக்கலைப்பைத் தடுக்கவும் கர்ப்பம் அடையும் பெண்களை ஊக்குவிக்கும் வகையிலும் அவர்களுக்கு ஊக்குவிப்புத்தொகை வழங்க வேண்டும் என்று இரு முக்கிய எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்காக புதிய சட்ட வரைவை எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்ய உள்ளன. இந்த மாதக் கடைசியில் அந்த சட்டத் திருத்தம் மீது வாக்கெடுப்பு நடக்கவுள்ளது. இதற்கு அமெரிக்க ஆதரவு இருப்பதால் இந்தச் சட்டம் எளிதாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இந்தச் சட்டம் நிறைவேறியதும் கர்ப்பமாகும் பெண்களுக்கு மூன்றாவது மாதத்தில் இருந்து மாதம் 250 யூரோ நாணயம் ஊக்குவிப்பாகக் கிடைக்கும்.



இஸ்ரேலையும் பலஸ்தீனத்தையும் பிரிக்கும் பிரமாண்டமான தடுப்பு வேலியை இஸ்ரேல் அமைத்து வருகிறது. ஜெருசலேமின் புறநகர் பகுதிகளையும், பலஸ்தீனத்தின் மேற்குக் கரையையும் இந்த வேலி பிரிக்கிறது.

# எயிட்ஸ் நோய்க்கு தடுப்பு மருந்து

எச்.ஐ.வி கிருமியை கண்டறிந்த வைத்தியரே அதற்கு தடுப்பு மருத்தையும் கண்டு பிடித்து இருக்கிறார். ஆனால் இந்தத் தடுப்பு மருந்து நான்கு மாதங்கள் மட்டுமே வேலை செய்கிறது. நீண்ட நாள் செயற்படும் வகையில் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சியில் அந்த மருத்தவர் ஈடுபட்டுள்ளார்.

உயிர்கொல்லி நோயான எயிட்ஸ் உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் எயிட்ஸ் நோய் 31 இலட்சம் உயிர்களைப் பலிவாங்கி இருக்கின்றது. ஆபிரிக்க நாடுகளில் தான் எயிட்ஸ் நோயினால் உயிரிழப்பவர்கள் அதிகமுள்ளனர். "எயிட்ஸ்" நோய் எச்.ஐ.வி. கிருமிகளால் தான் ஏற்படுகின்றது என்பதை கண்டறிந்த வைத்தியர்களில் ஒருவரான ரொபர்ட் கோலோ என்ற இந்த வைத்தியர் அமெரிக்காவின் மேரிலானர்ட் மருத்துவ ஆராய்ச்சி நிலைய இயக்குநராக இருக்கிறார்.



உலகிலேயே மிக அதிகளவில் சாலை விபத்துக்கள் சீனாவில் தான் நடக்கின்றன. ஷான்சி மாநிலம் ஷியானில் நடந்த விபத்தொன்றில் ஒரு பாலத்தில் பாராவூர்தி சிக்கிக் கொண்டது. அதன் முன்பகுதி அந்தரத்தில் நிற்பதை படத்தில் காணலாம்.

# படையினரின் சோதனை நடவடிக்கை திருகோணமலை நகரில் அதிகரிப்பு

## நான்கு புதிய இராணுவ காவல் நிலைகளும் அமைப்பு

(திருகோணமலை)

**திருகோணமலை நகரில் கடந்த சில தினங்களாகப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும், இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் அரச அலுவலகங்களுக்குப் போகும் ஊழியர்கள் சிரமங்களுக்கு ஆளாவதாகவும், திருகோணமலை மாவட்டப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம் சனாதிபதிக்கு முறையிட்டுள்ளது.**

இது தொடர்பான மகஜர் ஒன்றை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் கனகசபை தேவகடாட்சம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொலை நகல் மூலம் சனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். மகஜரில் அவர் தெரிவித்திருப்பதாவது;

"2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப் பட்டதை அடுத்து படையினர் வாகனங்களை மறித்து பயணிகளைச் சோதனையிடுவது அவர்கள் எடுத்துச் செல்லும் பொருட்களை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப்பார்ப்பது சில காலமாக நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் இச் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளது. புதிய சனாதிபதி பதவி யேற்ற பின்னர் திருமலை உவர் மலைப்பகுதி மத்திய வீதியில் நான்கு புதிய இராணுவ காவல் நிலைகள் நிறுவப்பட்டுள்ளன. முகாம்களைத் தாண்டிச் செல்லும் வாகனங்கள் பயணிகள் மற்றும் பொதிகள் படையினரின் தீவிரசோதனைக்கு உட்படுத் தப்படுகின்றன.

''திருகோணமலை உள் துறைமுக வீதியில் இந்து கலாச்சார மண்டபத்திற்கு முன்பாக அனைத்து பேருந்துகளும் படையினரால் நிறுத் தப்பட்டு பயணிகள் இறக்கப்பட்டு ஒவ்வொருவராக நுணுக்கமாக சோதனையிடப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப் படுகின்றனர். இதனால் பாடசாலை மாணவர்கள் நேரத்திற்கு வகுப்புக்களுக்குச் செல்ல முடியாத நிலை அதனால் அவர்களுக்கு உளவியல் ரீதியிலான பாதிப்புக்கு ஆளாகின்றனர். இச் சிரமங்களை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம். இவ்வாறு மகஜரில் கோரப்பட்டுள்ளது. மகஜரின் பிரதி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைமைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (25)



வவுனியா தெற்கு கல்வி வலய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழாவில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி L.F நடேசமூர்த்திக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதனைப் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு:- ஆறு. சுபாஸ்கரன்)

## உணவக உரிமையாளர்களின் கவனத்திற்கு

உணவக உரிமையாளர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளனர். இவ் அறிவுறுத்தலில்; எந்தக் காரணம் கொண்டும் உணவை வெறும் கைகளால் விநியோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

தேநீர் பாத்திரங்கள், உணவுப் பாத்திரங்கள் ஒவ்வொரு முறையும் சுடுகின்ற நீரால் அல்லது தொற்று நீக்கிகளின் உதவியுடன் கழுவப்பட வேண்டும். உணவுக்களஞ்சிய அலுமாரிகள் இலையான் புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்டிருக்க வேண்டும். பயனாளியால் கேட்கப்படுகின்ற உணவுகள் மாத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். கொதித்தாறிய நீரை மாத்திரமே பருகக்கொடுக்க வேண்டும்.கழிவகற்றல் நடைமுறைகளை உரிய முறைகளில் மேற் கொள்ளுமாறும் இச் செயற்பாடுகள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் உடனடி நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றது என்பதை தமிழீழ சுகாதார சேவையினர் அறியத்தந்துள்ளனர்..

# வவு.மாவட்ட சாரணர் பாசறை நிகழ்வில் பரமேஸ்வரா வித். சாரணர் சாதனை



(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட சாரணர் சங்கம் ஏற்பாடு செய்த வவுனியா மாவட்ட சாரணர் பாசறை வவுனியா தமிழ் மத்திய மகாவித் தியாலய மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சாரணர் ஆணையாளர் வீ. கணேசராஜா தலைமையில் நடைபெற்ற இப் பாசறை நிகழ்வில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், பண்டாரிக் குளம், விபுலானந்தாக் கல்லூரி, நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், புதுக்குளம் மகாவித்தியாலயம், பூந்தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அண்ணா நகர், பரமேஸ்வரா வித்தியாலயம், மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட சாரணர்கள் கலந்துகொண்டனர்.

இச் சாரணர்களுக்கு இடையே நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும், அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலய சாரணர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் சாதனை படைத்துள்ளனர். இப்பாடசாலைச் சாரணர்கள் ஒழுக்கத்தில் முதலாம் இடத்தினையும், உடற் பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தினையும், பாசறை அமைத்தல் போட்டியில் முதலாம் இடத்தினையும், தாச்சிப்போட்டியில் முதலாம் இடத்தினையும், கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தினையும், நாடகப்போட்டியில் இரண்டாம் இடத்தினையும், கைவினைக்காட்சிப்போட்டியில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு முல்லையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச எயிட்ஸ் தினமான நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஜெயக்குலராசா தலைமையில் மேற்படி கருத்தரங்கு நடை பெற்றது. எயிட்ஸ் எனும் உயிர்க்கொல்லி நோயானது இதுவரை எமது மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை. எனினும் இங்கு எயிட்ஸ் நோய் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகம் இருப்பதாகவும் இதற்கு வெளிநாட்டு பயணிகளின் வருகை அதிகரித்து இருப்பதும் உள்ளூரில் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பற்ற உடல் உறவுகள் மூலமும் இந்நோய் வருவதற்குரிய சந்தர்ப்பம் அதிகம் உள்ளதாகவும் ஜெயக்குலராசா தெரிவித்தார்.

எனவே இதிலிருந்து நாம் விடுபட அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

மேற்படி கருத்தரங்கில் மாவட்ட குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள், கிராமிய சுகாதார உதவியாளர்கள், தொண்டர்கள் என 80 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அத்துடன் வெள்ள அனர்த்தத்தின் பின்னரான நோய்த் தடுப்பு முறை பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு.தீ)

## கலைத்திறன் போட்டிகள் பிற்போடல்

முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரியினரால் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச சம்மேளனத்தின் அனுசரணையுடன் லெப். கேணல் மறவன் மாஸ்ரர் . நினைவாக நடத்தப்படவிருந்த கலைத்திறன் போட்டிகள் எதிர்வரும் ஆறாம் திகதிக்கு பிற்போடப் பட்டுள்ளன.

இது சார்ந்து விண்ணப்பங்களை அனுப்பியோருக்கு நேரடியாக போட்டிகள் நடைபெறும் இடம், காலம் என்பன அறிவிக்கப்படும். அத்தோடு புதிய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் என தமிழீழ நுண்கலைப்பிரிவு பணிப்பாளர் த.தணிகைமாறன் தெரிவித்துள்ளார்.

# நோய்த் தொற்றிலிருந்து விடுபட கொதித்தாறிய நீரைப்பருகுக!

## –வைத்திய கலாநிதி ஜெயக்குலராசா

(அலுவலக செய்தியாளர்)

மழை நீர் தேங்கி நிற்பதாலும் அதனால் ஏற்படுகின்ற தோற்று நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் சுட்டாறிய நீரினைப் பருகுவதே சிறந்த வழிமுறையாகும் என முல் லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயக்குலராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக முல்லைத்தீவு இடைத் தங்கல் முகாம்களில் உள்ள குடிசைகளைச் சூழ மழைநீர் அதிகம் தேங்கியுள்ளது. இதனால் குடிநீர், மலசலகூடம் போன்ற பாவனைகளை பல சிரமத்தின் மத்தியில் மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் அங்கு தேங்கியுள்ள நீரின் மூலம் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், மலேரியா, செங்கண்மாரி போன்ற தொற்று நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் உண்ணாப்புலவு இடைத்தங்கல் முகாமில் 15 பேருக்கு இதுவரை செங்கண்மாரி நோய் ஏற்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

எனவே இவற்றிலிருந்து நாம் விடுபட அனைவரும் சுட்டாறிய நீரினையே பருகவேண்டும் என இடைத் தங்கல் முகாமில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஏனையோருக்கும் முக்கிய வேண்டுகோளாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (கு.தீ)

## வீடு கையளிப்பு

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடாவில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட்ட மாதிரி வீடமைப்புத் திறப்பு விழா இன்று இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு பள்ளிக் குடாவில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு இந்த மாதிரி வீடு கையளிக் கப்படவுள்ளது. (34)

## உணவு வழங்குதல்

உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட முத்து ஐயன் கட்டு இடது கரை 18 ஏக்கர் பிரதேச மக்களுக்கு கடந்த 24 ஆம் திகதி இடதுகரை அ.த.க பாடசாலையிலும் சிவநகர் இ.த.க பாடசாலைகளிலும், வைத்து உணவுப் பொருட்களும் ஏனைய இதர பொருட்களும் முல்லை மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் வழங்கப்பட்டன.

-புலமைப்பரிசில், உயர்தரம்-

# பரீட்சைகளில் சித்தி அடைந்தவர்களுக்கு வவுனியா தெற்கில் பாராட்டு விழா

(வவுனியா செய்தியாளர்)

இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. உயர்தர பரீட்சை என்பனவற்றில் வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் இருந்து தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான பாராட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித் தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா தெற்கு வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி வீ.ஆர்.ஏ. ஓஸ்வேல்ட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம், சிறப்பு விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம், கௌரவ விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் அகமட் ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 456 மாணவர்களும், அவர்களுக்கு கற்பித்த 44 ஆசிரியர்களும் மிகத்திறன் குறைந்த மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்திய 27 ஆசிரியர்களும், இப்பாடசாலைகளின் 34 அதிபர்களும், க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி கலை, வர்த்தக, கணித விஞ்ஞானத் துறைகளில் மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப்பெற்ற 40 மாணவர்களும், அவர்களுக்கு கற்பித்த 117 ஆசிரியர்களும், இப் பாடசாலைகளின் அதிபர்களும் விருந்தினர்களால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (10)

# துரோகச் செயலில் ஈடுபடுவோர் கருணை இன்றி தண்டிக்கப்படுவர்

## மறவர் படையினர் இறுதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ மற்றும் பொலிசார், தேச விரோதிகளின் துணையுடன் தமிழீழனத்தை சிதைத்து நலிவுற்ற ஒரு இனமாக மாற்றுவதற்கு எதிரி முயன்றுகொண்டிருக்கும் வேளையில் இச் செயற்பாடுகளுக்கு துணை போகும் மற்றும் தமிழ் மறவர்களின் தியாகங்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் செயற்படுதல், மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், அற்ப சலுகைகளுக்காக மானமுள்ள தமிழினத்தை காட்டிக் கொடுத்தல் போன்ற துரோகத்தனமான செயல்களில் ஈடுபடுவோர் மீது எவ்வித கருணையுமின்றி தண்டனை நிறைவேற்றப்படும் என மறவர் படை எச்சரித்துள்ளது.

இன்று தமிழினமும் தமிழ் தேசமும் ஆயிரமாயிரம் மாவீரர்களினதும் மானமுள்ள தமிழ் மக்களினதும் குருதியால் எழுதப்பட்ட விடுதலைக்கான சுதந்திர தாயகத்தை நோக்கிய பாதையில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. இதனை விரும்பாத சிறிலங்கா புலனாய்வுத் துறையும், இராணுவ மற்றும் பொலிசாரும் தம்மோடுள்ள ஈ.பி.டி.பி போன்ற தேசவிரோதிகளின் துணையுடன் தமிழினத்தை சிதைத்து நலிவுற்ற ஓர் இனமாக மாற்றுவற்கு முயன்று கொண்டிருக்கின்றனர். இச் செயற்பாடுகளுக்கு துணை போவது போன்று தமிழ் மறவர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்தும் வகையில் யாழ் மாவட்டத்தில் சில ஆண்கள் மற்றும் பெண்கள் எம்போர் கலாச்சாரத்தை சீரழிவு செய்யும் நடவடிக்கைகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் அற்பசலுகைகளுக்காக மானமுள்ள தமிழினத்தை காட்டிக்கொடுத்தல் போன்ற துரோகத் தனமான ஒரு போதும் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றங்களை மேற்கொள்கின்றனர். இந்த புற்று நோய்கள் உடனடியாக கட்டுப் படுத்த வேண்டும் என மறவர் படை எச்சரிக்கை விடுத்துள்ளது. அவ் எச்சரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அன்பானவர்களே!

இவ்வளவு காலமும் தமிழினத்தின் மானங்காத்துப்பாடுபடும் பல படையணிகளின் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்தது போல் இனி வரும் காலங்களிலும் செயற்படாது எமது சுதந்திர தாயகத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆதரவாக இல்லாவிட்டாலும் மேற்காட்டப்பட்ட சீர்கேடான, தமிழினத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருக்குமாறு வேண்டுகின்றோம். இதுவே இறுதியான எச்சரிக்கையாகும். இனிவரும் காலங்களில் செயற்பாடுகள் மூலமே பதில் தரப்படும். எந்நேரமும் உரியவர்கள் கடுமையான தண்டனைக்கு ஆளாவர்கள் என்பதை இறுதியாகவும் உறுதியாகவும், தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேசவிரோதிகளுடனான அனைத்து விதமான தொடர்புகள், சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சிறிலங்காப் படையினர் மற்றும் பொலிசாருக்கு இலஞ்சம் வழங்குதல், தொடர்புகள் வைத்திருத்தல், சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவோர், பெண்களுடனான பாலியல் ரீதியான துன்புறுத்தல், அங்கசேட்டை, தகாத வார்த்தைப் பிரயோகம், சிறிலங்கா கூலிப் படைகள் மற்றும் பிற ஆண்களுடனான பெண்களின் பாலியல் தொடர்புகள், குழு மோதல், கொள்ளை, பணத்திற்காக இழிவான செயல்களில் ஈடுபடல் பொது இடங்கள் வீதிகள் சந்திகள் போன்ற இடங்களில் சமூக நோக்கு தவிர்ந்து கூடி நிற்றல், வீண்வம்பு பேசுதல், வதந்திகள் பரப்புதல், மது போதையில் ஏனையவர்களுக்கு இடையூறாக இருத்தல், பாலியல் தொடர்பான புத்தகங்கள், பத்திரிகைகள் இறுவெட்டுக்கள், ஒளி நாடாக்கள், விநியோகிப்போர் மற்றும் வைத்திருப்போர் ஏனைய கலாச்சாரத்தை சீரழிக்கும் வகையிலான செயற்பாடுகள்.

எதிர்வரும் காலங்களில் மேற் கூறப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது எவ்வித கருணையுமின்றி தண்டனை நிறைவேற்றப்படும். எமது இனத்திற்கு கௌரவமான, சுபீட்சமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுக்க மேற்படி சம்பவங்களில் ஈடுபடும் புல்லுருவிகளை ஒவ்வொரு தன்மானத் தமிழரும் வெளிப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)





சமுர்த்தி நிவாரண விநியோகம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலருணவு நிவாரணம் நிறுத்தப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் சமுர்த்தி நிவாரணம் என்ற போர்வையில் நிவாரணத்தை வெட்டியும், ஏழைகளின் வயிற்றிலடிக்கும் திட்டம் உடன் கைவிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், கோப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படம்:-41)

## வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் ஆறாம் திகதி காலை 9.00 மணிக்கு பிரதேச செயலர் சீ.ஏ மோகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

தொடர்ந்து அன்றைய தினம் 12.30 மணிக்கு பிரதேச விவசாயக் குழுக்கூட்டமும் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.(37)

## யாழ்.மாவட்ட 143 கிராம அலுவலர்களுக்கு மாவட்டத்திற்குள்ளேயே இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 143 கிராம அலுவலர்களுக்கு மாவட்டத்திலுள் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த 15 வருடத்தின் பின்னர் இத்தகைய ஒரு இடமாற்றம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

நெடுந்தீவு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் தவிர ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களில் பெரும்பான்மையினர் இடமாற்றங்களுக்கு உள்ளாக வுள்ளனர்.

இவ் இடமாற்றமானது எதிர் வரும் 2006 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

55 வயதுக்கு உட்பட்டவர்களும் ஐந்து வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ஒரே பிரதேச செயலகத்திலோ, உதவி அரசாங்க அதிபர் பிரிவிலோ கடமையாற்றிய கிராம அலுவலர்களுக்கே இவ் இடமாற்றம் வழங்கப்படவுள்ளன. (41)

## அரச மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தரின் நடவடிக்கையை தடுத்து நிறுத்திய மக்கள்

(நல்லூர்)

வீதியில் வீழ்ந்த பாரிய பெறுமதியுள்ள மரத்தை பிழையான முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி கொண்டு செல்ல முயன்ற அரச மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தரின் நடவடிக்கை பொது மக்களின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள பழைய நீதிமன்ற கட்டடத்திற்குள் பல வருடங்கள் சென்ற மலை வேம்பொன்று வீழ்ந்துள்ளது.

இதன் கொப்புகளை வெட்ட முயன்ற பொது மக்களை சட்டத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட அரச உத்தியோகத்தர் தடுத்து நிறுத்தியுள்ளார்.

தொடர்ந்து மரத்தின் பெரிய கிளைகள் இரண்டை வெட்டி எடுத்துச் சென்ற ஊழியர் அதனை தனியார் மரக்காலையில் விற்பனை செய்ததைக் கண்டு பீடித்த பொது மக்கள் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இவர்கள் உரிய இடத்தில் வைத்து குறித்த மரம் ஏல விற்பனை செய்யப்பட்ட வேண்டும் என வலியுறுத்தியுள்ளதுடன் கலாச்சாரத்தைப் பேணும் குழுவினருக்கும் இச் செயல் சம்பந்தமாக அப் பகுதி பொது அமைப்புக்களால் செய்யப்பட்ட முறைப் பாட்டைத் தொடர்ந்து ஏலத்தில் மரம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. (41)

## தமிழீழ சுகாதார சேவையின் முன்னெச்சரிக்கையால் தொற்று நோய் அபாயம் தவிர்க்கப்பட்டது

(நல்லூர்)

தமிழீழ சுகாதார சேவையினரின் முன் செயற்பாட்டு நடவடிக்கை மூலம் வெள்ளத்தினால் ஏற்படக் கூடிய தொற்று நோய் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளதாக பொது மக்களும் அரச உத்தியோகத்தர்களும் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் மழைகாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வெள்ள அபாயத்திற்குட்பட்டு இடப் பெயர்வுகளுக்கு உள்ளாகியும் இருந்தார்கள்.

இவர்களின் சுகாதார நடவடிக்கைகளில் தமிழீழ சுகாதார சேவையினர் கூடிய கவனம் எடுத்து செயற்பட்டுள்ளார்கள். வெள்ளம் தேங்கிய இடங்களில் நுளம்புப் பெருக்கம் ஏற்படாவண்ணம் மருந்துகள் தெளிக்கப்பட்டு குடிநீருக்கு குளோரின் இடப்பட்டும் மலசல கூடங்களின் துப்புரவுகள் பேணப்பட்டும், மலசல கூடப்பாவனைப்பாட்டை கடுமையாக நடைமுறைப்படுத்தியமையினாலும் தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப்படுவதாகவும் தெரிய வருகிறது.

இந்நடவடிக்கைகளையிட்டு பொது அமைப்புக்களும் மக்களும் தமிழீழ சுகாதார சேவையினரின் நடவடிக்கைக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள். (41)

-இலங்கை நீதி அமைச்சின் அனுசரணையுடன்-

## மத்தியஸ்தர் சபைக்கான உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இலங்கை நீதி அமைச்சின் அனுசரணையுடன் இயங்கவுள்ள மத்தியஸ்தர் சபைக்கான உறுப்பினர்களின் நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

நீதியமைச்சில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் இச் சபையின் தலைவரான எஸ்.சிவநாதனுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஏனைய பதினாறு உறுப்பினர்களுக்குமான நியமனக்கடிதங்கள் தலைவரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

16 உறுப்பினர்களுக்குமான நியமனக் கடிதங்களை நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் மற்றும் தலைவர் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களுக்கு வழங்கினார்கள்.

இம் மாதம் முதல் இம் மத்தியஸ்தர் சபை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (41)

## யாழ். மாவட்ட குடும்பங்களுக்கு கெயார் நிறுவனம் நிவாரண உதவி

(வலிகாமம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவனமான கெயார் நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளான பருத்தித்துறை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே மேற்படி வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வல்வெட்டித்துறை, ஆதி கோவிலடி முனை, நெடியகாடு, கொட்டடி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வாழும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சண்டிலிப்பாய், பிரதேச செயலர் பிரிவில் சாந்தை, காக்கைதீவு, இளவாலை கிழக்கு மாதகல் மேற்கு, இளவாலை மேற்கு மாதகல் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த வெள்ளம் பாதித்த மக்களுக்கும் கெயார் நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த உதவியின் கீழ் இரும்பு வாளிகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பிளாஸ்டிக் பாய்கள் என சுமார் 750 ரூபா தொடக்கம் 1000ரூபா வரையிலான பொருட்களை வழங்கியிருப்பதாக கெயார் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (37)



கடந்த 26ஆம் திகதி முத்துஐயன்கட்டு வலது கரையைச் சேர்ந்த நீர்மின் உற்பத்தியாளரான பசுபதி இராதா கிருஷ்ணன் என்பவருக்கு 20000 பெறுமதியான கடைச்சல் இயந்திரம்ஒன்றுமுல்லை மாவட்ட வொருண்மிய மதியுரையகத்தால்வழங்கப்பட்டுள்ளது. (05)

# வியாழக்கிரகத்தில் வால்வெள்ளி மோதல் முன்பும் நடந்ததுண்டா?

இம்மானுவேல் வெலிக்கோவ்ஸ்கி (Iimmanuel Velikovsky) எனும் ரஷ்ய விஞ்ஞானி 1950 இல் தான் எழுதியநூலான "மோதும் உலகங்கள்"(Worlds in Collision) எனும் நூலில் இத்தகைய ஒரு மோதலே வியாழனில் (Jupiter) இருந்து வெள்ளி (Verus) எனும் கிரகம் பிரியக் காரணமாகியது என்றும் அவ்வாறு வெள்ளியானது வியாழனில் இருந்து பிய்த்து எறியப்பட்டு படுவேகமாகப் பூமியை நோக்கி பூமியை மோதுவது போல் மிக அருகில் வந்தபோது பூமியில் பலஅனர்த்தங்கள் விளைந்தன வென்றும், ஆனால் பூவுலக வாசிகளின் நல்ல காலத்தினால் வெள்ளி பூமியில் மோதாது விலகிச் சென்று தனக்கென ஒரு பாதையில் சூரியனைச் சுற்ற ஆரம்பித்தது என்கிறார்.


1950 இல் வெலிகோவ்ஸ் கியின் நூல் வெளியான போது அது பெரிய விஞ்ஞானிகளாலும் வானவியல் ஆய்வாளர்களாலும் முற்றாக நிராகரிக்கப் பட்டது வெலிக்கோவிஸ்கியை நன்கு அறிந்தவராக ஐன்ஸ்ரன் (Einstein) கூட அதை நிராகரிக்காவிட்டாலும் உரிய மதிப்பளித்துப் படிக்கவில்லை. 1950 இல் வெலிக்கோவ்ஸ்கி ஐன்ஸ்ரனிடம் வியாழன் வானொலி அலகுகளை வெளியிடும் கிரகமெனப் பந்தயம் கட்டி அதை எழுதியும் கொடுத்தார். பத்து மாதங்களின் பின்னர் 1955 இன் ஆரம்பத்தில் காணீர்ஜியில் உள்ள வானியலாய்வு நிலையத்தினர் வியாழனிலிருந்து வரும் வானொலி அலைகளைப் பதிவு செய்தனர். இச் செய்தி வெளியானதும் ஐன்ஸ்ரன்தான் வெலிக் கோவ்ஸ்கியின் நூலுக்கு உரிய மதிப்புக் கொடுக்கவில்லையென்று கூறி அதை ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். அவர் மோதும் உலகங்களைப் படித்துக் கொண்டிருக்கும் போதே உலகவாழ்வை நீத்தார். இதனால் சந்திரனில் மனிதன் காலடிஎடுத்து வைக்கும் வரை யாரும் அந்நூலை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

சந்திரனில் மனிதன் காலடிவைத்த காலத்தில் வெலிக்கோவ்ஸ் தனது நூலில் வெள்ளிக்கிரகம் அருகில் வந்ததால் சந்திரனில் ஏற்பட்டிருக்கக்கூடிய தாக்கங்கள் பற்றிக் கூறிய எதிர்வுகள் மிகச் சரியாக இருப்பதை அறிந்தார்கள். இதனால் 1970 களில் மீண்டும் அவரது நூலைப் பற்றிய சர்ச்சைகள் எழுந்தன.

அப்போது வெலிக்கோவ்ஸ்கி தான் எழுதியவைகளில் உள்ள உண்மையை காலம் நிரூபிக்கும் யாராலும் என் நூலில் ஒரு எழுத்தையும் மாற்றமுடியாது என்று கூறினார். 1974 இல் மறினர் 10 அனுப்பிய செய்திகள் இவரது கருத்துக்கள் உண்மையாக இருக்கலாமென்ற நிலைக்கு விஞ்ஞானிகளை இட்டுச்சென்றது. (தொடரும்)

# பூமி பற்றிய சில செய்திகள்

- பூமியில் மத்திய கோட்டு விட்டம் 12756 கிலோமீற்றர்.
- மத்திய கோட்டில் பூமியின் சுற்றளவு 40 075 கிலோ மீற்றர்.
- பூமிக்கும் சூரியனுக்கு மிடையிலான சேய்மைத்தூரம் 14 96 00 000கி.மீ. அண்மைத்தூரம் 1440 00 000 கி.மீ
- பூமி சூரியனைச் சுற்றி வருகின்ற நீள் வட்டப் பாதையைப் புவியொழுக்கு என்பர்.
- கண்டங்களில் மிகப்பெரியது ஆசியா (4 39 90.000 சதுர கி.மீ) மிகச்சிறியது அவுஸ்திரேலியா (7713000 சதுர கிலோமீற்றர்)
- அந்தாட்டிக்காக் கண்டம் தென்முனையச் சுற்றியுள்ளது. 1895 இல் நோர்வே நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டென் ஜென் என்பவர் முதன்முதல் அந்தாட்டிக்கா சென்றார்.
- உலகிலேயே மிகவுயர்ந்த மேட்டு நிலமான திபெத்தை உலகின் கூரை என்பர்.
- உலகிலேயே மிகவுயரமான மலைச்சிகரம் எவரெஸ்ட் (8848 மீற்றர்).
- உலகில் மிக நீளமான மலை அந்தீஸ் 7241 கி.மீ
- பின்லாந்து ஏரிகள் நிறைந்த நாடு என்று அழைக்கப்படுகின்றது. இங்கு பத்து ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏரிகள் உள்ளன. இந்த நாட்டின் பரப்பில் 10 % ஏரிகளாகும்.
- உலகிலேயே மிகவுயரமான இடத்திலமைந்துள்ள தலைநகரம் லாபாஸ். இது அந்தீஸ் மலையில் பொலிவியா நாட்டின் தலைநகர் உயரம் 6459 மீற்றர்.
- உலகின் மிகப்பெரிய தீவு கிறீன்லாந்து 21 75 597 சதுரகிலோமீற்றர்.



யப்பானிய ஆட்டோ உற்பத்தி நிறுவனமான டொயாட்டோ புதிதாக அறிமுகமாக்கிய "Fine-x" என்ற ஆட்டோ மின்கலத்தினால் இயக்கப்படும் கலப்பு உலோகத்தினால் ஆனதாகும்.இது விரைவில் கண்காட்சி ஒன்றில் வைக்கப் படவுள்ளது.

# வெப்பத்தைக் கட்டுப்படுத்த புதிய மூலப்பொருள்



லண்டனின் இரசாயனவியல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஐவன் பார்கினும் றொய் மானிங்கும் இணைந்து ஒரு வகை சவ்வுப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்துள்ளனர். இது இரு வாயுக்களின் சேர்வையால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அதிவெப்பம் உள்ள நாட்களில் காரியாலயங்களிலும் வீடுகளிலும் யன்னலில் இந்த சவ்வுப் பொருளை ஒட்டுவதால் அங்கு வெப்பம் கட்டுப் படுத்தப்படுகின்றது அதே போன்று குளிர்காலத்தில் அறைகளில் வெப்பத்தை ஏற்படுத்தக்கூடிய சவ்வுப் பொருட்களையும் உற்பத்தி செய்துள்ளனர். இதனால் இலத்திரனியல் சாதனங்களின் பாவனை குறைக்கப் பட்டு மின்சாரத்தேவை கட்டுப் படுத்தப்படுகின்றது.

இவை இன்னும் சந்தைக்கு அறிமுகப்படுத் தப்படவில்லைஎனத் தெரிவித்துள்ள மேற்படி உற்பத்தியாளர்கள் விரைவில் அவற்றை சந்தைக்கு விட விருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

# உரிமையாளர் மட்டும் இயக்கக் கூடிய துப்பாக்கி




தென்னாபிரிக்காவைச் சேர்ந்த "வான்ஷைல்" என்ற பொறியியலாளர் சுமார் 15 வருடகாலமாக எடுத்துவந்த முயற்சியில் புதிய வகைத் துப்பாக்கி ஒன்றை வடிவமைத்துள்ளார். துப்பறியும் துப்பாக்கி எனப் பெயர் சூட்டியுள்ள இதனை சட்டப்படி உரிமை பெற்றவர் மட்டுமே பயன்படுத்துவதற்கு இத்துப்பாக்கி அனுமதியளிக்கும். அதன்படி இதனை சட்டவிரோதமாக வன்முறையாளர் ஒருவர் பாவிக்க முடியாது.

தென்னாபிரிக்காவில் சாதாரண துப்பாக்கிகளை சிறுவர்கள் முதற்கொண்டு பாவித்து வருவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் கண்டறியவும் தடுக்கவும் ஏதாவது மாற்று வழியைக் கையாளவேண்டும் என்ற நோக்கத்தில் ஷைல் இத் துப்பாக்கியை வடிவமைத்துள்ளார். இதனை உற்பத்திசெய்ய உலக நாடுகளின் தொழிநுட்பத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் இதற்கு குடும்ப உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் ஷைல் தெரிவித்துள்ளார்.

இந்தத் துப்பாக்கியைப் பாவிக்கும் ஒருவருடைய சுயவிபரங்களையும் உருவப்படத்தையும் அது பதிவு செய்து வைத்திருக்கும் இதற்கான புகைப்படக் கருவி அதில் பொருத்தப்பட்டுள்ளது. வேறு எவராவது இதைப் பாவித்தால் இது இயங்காது.இதனைக் குற்றவாளிகள் பாவிக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் அவர்கள் துப்பாக்கியின் உதவியுடன் கைது செய்யலாம்.

# உலகின் அதிகூடிய நிலப்பரப்பையுடைய நாடுகள்

| | | |
|---|---|---|
| 01.ரஷ்யா- | 170 75000 | சதுர கிலோ மீற்றர். |
| 02.கனடா- | 9976000 | சதுர கிலோ மீற்றர். |
| 03.சீனா- | 9561000 | சதுர கிலோ மீற்றர். |
| 04.அமெரிக்கா- | 9364000 | சதுர கிலோ மீற்றர். |
| 05.பிறேசில்- | 8512000 | சதுர கிலோ மீற்றர். |
| 06.அவுஸ்திரேலியா- | 7713000 | சதுர கிலோ மீற்றர். |
| 07.இந்தியா- | 3288000 | சதுர கிலோ மீற்றர். |



இங்கு காணப்படுவது காரியலயங்களில் வரவேற்பாளர்களாகப் பணிசெய்யும் தொலைக் காட்சியாகும். யாராவது ஒரு விருந்தினர் உள் நுழைந்தால் அவரைக் கண்டவுடன் வரவேற்கும் உருவம் தொலைக் காட்சியில் தோன்றும் இது இடத்துக்கிடம் மாறும் திறன் கொண்டது.



யப்பான் தயாரிப்பான புதிய செல்லிட தொலைபேசியே இங்கு காணப்படுகிறது. இது மிதேன் வாயு அடங்கிய பேனை உருவத்தினாலான மின்கலத்தினால் இயங்குவதுடன் எந்நேரமும் சக்தியை வழங்கிக் கொண்டிருக்கும்.

–சமாதான நடவடிக்கைகள் குறித்த–

# மகிந்தவின் செயற்றிட்டங்களை பகிரங்கப்படுத்த ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

**சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவுள்ள செயற்றிட்டங் களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பு ஊடகவியலாளர் களிடம் ஐ.தே.க.வின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியதாவது;

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென்னிலங்கை மக்களுக்கு போர் நிறுத்த உடன்படிக்கையை திருத்தப் போவதாகக் கூறினார்.

வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந் திக்கும் போது போர் நிறுத்த உடன் படிக்கையை முன்னெடுத்துச் சொல்லப்போவதாக தெரிவித் துள்ளார். இந்த இரண்டு கருத்துக் களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கின்றன.

மேல்மாகாண சபை உறுப்பினர் துஷார பெரேரா, பெல்மதுல்லை பிரதேச சபை உறுப்பினர் தயா திஸ்ஸலியனகுணவர்த்தன, குளியாப் பிட்டிய நகர மேயர் நிமால் பீரிஸ் ஆகிய மூவரை கட்சி அங்கத்துவப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மகிந்தவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருப்பதாக எங்க ளுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது சம்பந்தமான விடயங்கள் இணையத்தளம் ஒன்றில் வெளி யாகியுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் மகிந்தவின் செயற் றிட்டங்கள் என்னவென்பது பற்றி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

தர்மராஜ்ஜியம் ஒன்றை ஏற்படுத்தப்போவதாக ஜாதிக ஹெல உறுமய கூறிவந்தது. ஆனால், அவர் கள் ஆதரித்த மகிந்த ராஜபக்ஷ இன்று புத்தசாசன அமைச்சை இரத் துச் செய்துள்ளார்.

இது குறித்து ஜாதிக ஹெல உறுமய மௌனம் சாதிப்பது ஏன் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

# சர்வதேச மோசடிகளைத் தடுக்க சிறீ.இல் கொள்கை ஒன்று தேவை

சர்வதேச மோசடிகளை தடுக்க கொள்கை ஒன்று சிறிலங்காவில் செயற் படுத்தப்பட வேண்டும் என சிறிலங்காசட்டஉதவி ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி சர்வ தேச மோசடி தடுப்பு தினம் அனுஷ் டிக்கப்படுவதால் ஆணைக்குழு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

சர்வதேச மோசடித் தடுப்பு ஒப்பந்தத்தில் சிறிலங்கா கைசாத் திட்டுள்ளது.

எனினும் இந்த இணக்கத்தின் நடைமுறைகள் இதுவரை சிறி லங்காவில் செயற்படுத்தப்பட வில்லை என ஆணைக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

சிறிலங்கா அதனை செயற் படுத்த பாராளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்படவேண்டும் எனினும் இதற்கான சட்டமூலம் இது வரை சமர்ப்பிக்கப்பட்டு நிறை வேற்றப்படவில்லை எனவும் சட்ட உதவி ஆணைக்குழு குறிப் பிட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத் துறையில் மோசடிகளைத் தடுக்க நாட்டில் உறுதியான கொள்கைகள் வகுக்கப்படவேண்டும் எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

# உரத்தின் விலை 350 ரூபாவாகக் குறைப்பு!

(கொழும்பு)

விவசாயிகளுக்கு 350ரூபாவுக்கு சகலவிதமான இரசாயனப் பசளைகளும் விநியோகிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கும் முன்னணி அமைச்சர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கம் எட்டப்பட்டது.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொள்கைக்கு ஏற்பவே இந்தப் பசளை மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டி எம் ஜெயரத்ன தெரிவித்தார். (32)

# விசா முறைகேடுகள் 59 இலங்கையர் கைது!

விசாமுறைகேடுகள் தொடர்பாக 59 இலங்கையர் கைது செய்யப் பட்டிருப்பதாக சிறிலங்காவுக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித் துள்ளது.

இந்த ஆண்டு விண்ணப்பிக் கப்பட்ட 13 ஆயிரம் விண்ணப்பங் களில் சந்தேகத்துக்குரிய 987 விண்ணப்பங்கள் மீது விசாரணை நடத்தப்பட்டன. விசா பெறுவதற்காக போலியாக ஆவணங்களை சேர்த்தது தொடர்பில் 59 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேர் போலி திருமணச் சான் றிதழ் கொடுத்ததாகவும், 12 பேர் போலியாக வேலை வாய்ப்பு சான் றிதழ் கொடுத்ததாகவும், நான்குபேர் போலியாக மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்திருந்தனர் என்றும் அமெரிக்கத் தூதரகச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு விசா முறைகேடுகள் தொடர்பாக 84 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மகிந்த அழைத்தால் பரிசீலிப்போம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகள் தொடர்பாக விவாதிப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை உத்தியோக பூர்வமாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்தால் அது குறித்துப் பரிசீலிப்போம் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இது குறித்து கூறி யுள்ளதாவது;

எம்முடன் பேச்சுக்கள் நடாத்து வது தொடர்பாக மகிந்தவிடமிருந்து எதுவிதமான கடிதமும் எமக்கு வரவில்லை. மகிந்த ராஜபக்ஷ எமக்கு அழைப்பு விடுத்தால் நாம் கூட்டமைப்பின் மத்திய குழுவைக் கூட்டி அது குறித்து விவாதிப்போம். மகிந்தவுடன் பேச்சுக்கள் நடாத்தும் முன்னர் தமிழீழ விடுதலைப் புலி களிடமும் இது தொடர்பில் ஆலோ சனை நடத்துவோம்.

எம்முடனோ தமிழீழ விடுதலைப் புலிகளுடனோ எந்த அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ பேச்சுக்களை நடாத்தப்போகிறார்?

அண்மையில் நடைபெற்ற வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்புக் கூட்டத்தில் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு மகிந்த அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் எந்த அடிப் படையில் பேச்சுக்களை நடாத்தப் போகிறார் என்பதைத் தெரிவிக்க வில்லை என்றார் மாவை சேனா திராஜா.

அமைதிப் பேச்சுக்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளை மகிந்த ராஜபக்ஷ அழைத்துள்ளபோதும் இது வரையில் எதுவித உத்தியோக பூர்வமான அழைப்பையும் தமிழீழ விடு தலைப்புலிகளுக்கு மகிந்த அர சாங்கம் அனுப்பிவைக்கவில்லை என்று கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன.

# ஆழிப்பேரலை புனரமைப்புக்களுக்காக மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் அமைப்பு

தற்போது அமுலில் உள்ள டெபார் மற்றும் டெப்லொல் ஆகிய இரண்டு நிறுவனங்களை உள்ளடக் கிய விதத்தில் அரசியலமைப்பின் 33 ஆவதுசரத்தின் கீழ் இந்தப் புதிய நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித் துள்ளது.

ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்புகளை மீண்டும் ஆராய்ந்து அதனை நிவர்த்திக்க இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திரான் அலஸ் என்பவரை தலை வராகக் கொண்டஇந்தஅமைப்பு நால் வரை உறுப்பினர்களாகக் கொண்டு ள்ளது.

இதில் வெளிநாட்டு மற்றும் நிதி யமைச்சின் அதிகாரிகள் இருவரும் உள்ளடங்குவர்

இந்தநிலையில் குறித்த நிறு வனமானது, பாராளுமன்ற சட்ட மூலத்தின் மூலம் அதிகாரசபையாக அங்கீகாரம் பெறவுள்ளதாகவும் சனா திபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஆலையடி வேம்பு மக்கள் ஆர்ப்பாட்டம்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த 18ஆம் திகதி ஏற்பட்ட அசம் பாவிதத்தைத் தொடர்ந்து அக்கரைப் பற்று மாவட்ட வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டு தற்பொழுது பகல் நேர வைத்திய நடவடிக்கைகள் மாத்திரம் வைத்திய அதிகாரிகளி னால் நடாத்தப்படுகின்றது.

அவசர சிகிச்சைகள், இரவு நேரசிகிச்சைகள் என்பன இடம்பெறவில்லை. இதனைக் கண்டித்து ஆலையடி வேம்பு பிரதேச மக்களால் மாபெரும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. இது மு.ப 11.00 மணியளவில் ஆரம்பித்து 1.00மணி வரை நீடித்தது. இவ் ஆர்ப்பாட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலிருந்து சாகாம வீதி வழியாகச் சென்று நகரை அடைந்தது. அங்கிருந்து அம்பாறை பிரதான வீதியினூடாக மாவட்ட வைத்தியசாலையை அடைந்து அங்கு வைத்திய அதிகாரி தயானந் தராசா அவர்களிடம் மனுகையளிக் கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ் ஆர்ப்பாட்டப்பேரணி மீண்டும் ஆலை யடிவேம்பு பிரதேசசெயலகத்தை அடைந்தது.அங்கு ஆர்ப்பாட்டப்பேரணி யினரால் பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராசாவிடம் மனுகையளிக் கப்பட்டது.



# சர்வதேச வலுவிழந்தோர் தினத்தில் வெண்புறா நிறுவனத்தால் நிகழ்வு

இன்று சனிக்கிழமை சர்வதேச வலுவிழந்தோர் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதனை வெண் புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் தமது கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்கள் மூலமாக வன்னி பெரு நிலப்பரப் பெங்கும் அனுஷ்டிப்பதுடன் இனங் காணப்பட்ட பயனாளிகளுக்கு உண வல்லாத வீட்டுப்பாவனைப் பொருட் கள் அடங்கிய பொதிகள் வழங்கவும் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

கிளிநொச்சி, பளை, பூநகரி, புதுக் குடியிருப்பு, மாங்குளம், பனங்காமம், நெடுங்கேணி, கனகராயன்குளம், ஆண்டாங்குளம், பாலம்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது தொடர்பகங்களில் காலை 10.00 மணிக்கு இந் நிகழ்வுகள் இடம் பெற வுள்ளன என வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

## கட்டடவேலை தாமதம்

(அலுவலக செய்தியாளர்)

காணி பிரச்சினையால், ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. வள்ளி புனத்தில் ஆரம்ப சுகாதார நிலையத் திற்கானநிரந்தரக்கட்டடம் கட்டிவரும் நிலையில் அதற்கான காணி சரியான சட்டவரைமுறைகளுடன் வழங்கப் பட்டிருக்காததால் கட்டடவேலை ஸ்தம்பிதமடைந்துள்ளது. (தீ.கு)

## கற்கை நெறி நாளை ஆரம்பம்


கிளிநொச்சிப் பிராந்திய நிலை யத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி 1 கற்கைநெறியை மேற்கொள் பவர்களுக்கான வகுப்புகள் நாளை வழமையான இடத்தில் வழமையான நேரத்தில் நடைபெறும். இதற்குரியவர் களை தவறாது பங்கு பற்று மாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் கி.சின்ன ராசா அறிவிக்கின்றார்.

## பரந்தன் இந்து அதிபராக சிவநேசர்

பரந்தன் இந்துமகாவித்தியாலய அதிபராக நல்லதம்பி சிவநேசர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக சமூகக் கல்வி ஆசிரியஆலோசகராக கடமை யாற்றி வரும் இவர் யாழ்ப்பாண பல் கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். (10)

# சர்வதேச வலுவிழந்தோர் தினம் - 2005



### வலுக்குன்றியோருக்கு வலுவூட்டும் வாழ்த்துக்கள்

காலங்காலமாய் "ஊனமுற்றவர்" என்றும் "வலுவிழந்தோர்" என்றும் தாழ்த்தப்பட்டு அடக்கப்பட்டு அந்நியப்படுத்தப்பட்டு உலகில் ஒரு பகுதி மக்கள் ஒதுக்கப்பட்டே வாழ்ந்துள்ளனர்.

ஒரு பெரும் பகுதி சமூகமோ அவர்களை எள்ளி நகையாடியது. உடலால் ஊனமுற்றோரை உலகிற்கு உதவாது என்று, பொருளாதார நிபுணத்துவமும் தத்துவமும் சொல்லிச் சொல்லி தமது புத்திஜீவி இருப்புகளை நிறுவியதோடு அபத்தமான நியாயப்படுத்தல்களையும் செய்துகொண்டிருந்தனர் மேம்போக்கானவர்கள்.

இவர்கள் போட்ட முத்திரைகள் கால ஓட்டத்தில் கிழிபடலாயிற்று. வரலாற்றில் "உடல் ஊனமுற்றவர்" என்ற சொல்லை யார் பாவிக்கிறாரோ அவரே "ஊனமுற்றவர்" என்று நவீன சமூகவியல் அறிஞர்கள் சொல்கிறார்கள். இதற்கான காரணத்தை குற்றெழுத்துக் கல்வியும் சைகைமொழியும் மற்றும் கணனிக் கல்வியும் மிகச் செம்மையாகவே உலகிற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

இன்று சர்வதேச சமூகம் வலுக்குன்றியோர் ஆண்டை மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறது.

இலங்கைத்தீவில் வாழ்கின்ற வலுக்குன்றியோருக்கும், இதர மற்றும் சர்வதேசத்தில் வாழும் வலுக்குன்றியோருக்கும் வலுவான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பெருமையடைகின்றது.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் மூவகை வலுக்குன்றியோர் உள்ளனர்.

1. பிறவியிலேயே ஏற்பட்டது.
2. போரின் கொடுமையால் ஏற்பட்டது.
3. ஆழிப் பேரலையால் ஏற்பட்டது.

இவர்களுக்கு வலுவூட்டுவது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலையாய கடமை. சர்வதேசத்தின் கடமையும்கூட.

சர்வதேசரீதியில் உள்ள வலுக்குன்றியோர்களுடன் மனிதாபிமானம் என்கின்ற நேசக்கரத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இறுகப்பற்றுகிறது.

ஒரு தலைசிறந்த வலுவூட்டலை வழங்க என்றுமே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் காத்திருக்கின்றது.

வாழ்த்துக்களுடனும் நன்றியுடனும்

கே.பி.றெஜி,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
கிளிநொச்சி,
இலங்கை.

### தலைவரின் ஆசிச் செய்தி



துர்அதிர்ஷ்டவசமாக சிலர் பிறப்பிலிருந்தும் இன்னும் சிலர் விபத்துக்கள் மூலமாகவும் பல்வேறு காரணிகளாலும் வலுவிழந்தவர்கள் ஆகின்றனர்.

இவர்கள் அத்தனை பேர்களும் சுகதேகிகளான மற்றவர்களின் உதவிகளை நாடி நிற்பவர்கள்.

நான் இத்தருணத்தில் கருணை உள்ளம் படைத்த அத்தனை மக்களையும் வெண்புறா நிறுவனத்தின் மனிதநேயப்பணிகளுக்கு ஆதரவளிக்க முன்வருமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

நன்றி.

**வைத்திய கலாநிதி**
**து.வி.ஜெயக்குலராஜா,**
**தலைவர்,**

உடல் உள ரீதியாக ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டதன் காரணமாக இயல்பு வாழ்க்கை மறுக்கப்பட்டு அல்லலுறும் எம்மில் ஒரு பகுதியினரை நினைவு கூர்ந்து அவர்களின் மறுவாழ்வுக்காக நமது பங்களிப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பதை மீளாய்வு செய்யும் நாள் இன்று.

வேகமாக மாறிவரும் மனிதவளர்ச்சியானது இப்படி உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை வலுவிழந்தவர்கள் என்று அழைப்பதை விடுத்து மாற்று வலிமை உடையவர்கள் என சுட்டிகாட்டுவது சாலவும் சிறந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது. மனித சமுதாயம் தனது ஆரம்பத்திலிருந்தே வலுவிழப்பினை சந்தித்து வந்துள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மையாயினும் வலுவிழப்பின் காரணமாக மனிதகுல வளர்ச்சியில் எந்தவிதமான தடங்கலோ வளர்ச்சியின்மையோ சம்பவித்ததாக சான்று கூறுவதற்கில்லை. மாற்று வலிமை படைத்தவர்களின் வளர்ச்சிப் படிக்கற்களாக எண்ணிலடங்காத சான்றுகள் இன்றும் எம்மை பிரமிக்க வைத்துக்கொண்டிருக்கின்றன. நவீன உலகின் ஏராளமான கண்டுபிடிப்புக்களும் சாதனைகளும் வலுவிழந்து, அதன் காரணமாக மாற்றுவலிமை படைத்தவர்களினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நேரடியாகவும் ஊடகவாயிலாகவும் உணரக்கூடியதாகவுள்ளது.

வலுவிழந்தவர்களும் எமது சமுதாயத்தின் ஓர் அங்கமே, அவர்களும் எமது உடன் பிறப்புக்களே என்னும் மனோ நிலையில் செயற்படும் தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் அயராத

விழிப்புணர்வினை விருத்தி செய்து தங்கள் தேவைகளைத் தகுந்த நேரத்தில் அடையக்கூடிய வழிவகைகளை அறிந்திருத்தல், நிவாரணப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் தன்னார்வலர்கள், நிறுவனங்கள் ஆகியன பயனாளிகளின் தேவைகளை இனம்கண்டு தேவைப்படும் உதவிகளை உரிய நேரத்தில் சென்றடையக்கூடிய வாய்ப்புக்களை தங்கள் முன்னோடி


புரையோடிப்போயுள்ள யுத்த அனர்த்தங்களினாலும் வேறு பல காரணிகளினாலும் தமது அவயவங்களை இழந்தும் உடல், மன நிலைகளிருந்து மாறுபட்டும் இயல்பு வாழ்க்கையினைப் பறிகொடுத்த நிலையில் இன்னும் வாழவேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு எம்முடன் இருந்து கொண்டிருக்கும் இவர்கள் யார்?

- இவர்கள் எமது உடன்பிறப்புக்கள்
- மனித உரிமைகள் அனைத்துக்கும் உரித்துடையவர்கள்
- மீண்டும் வாழத் துடிப்பவர்கள்
- இவர்கள் மாற்று வலிமை படைத்தவர்கள்
- வாழ்க்கையின் படிகளை இடையில் நிறுத்தியவர்கள்
- சமூக நீரோட்டத்தில் மீண்டும் சங்கமிக்க விரும்புபவர்கள்

*இதற்கு நாம் செய்யக்கூடிய மனிதநேயப் பணிகள் யாவை?*

- இவர்களை எமது உடன் பிறப்புக்களாகக் கருதுவோம்
- இவர்களது மாற்று வலிமையினை வளம்படுத்துவோம்







## இன்றைய நாளில் சர்வதேச வலுவிழந்தோர் தினம் அனுஷ்டிக்கப்படுவதை மேன்மைப்படுத்தும் முகமாக வெண்புறா நிறுவனத்தினால் இப்பிரசுரம் வெளியிடப்படுகின்றது.

வெண்புறா
WHITE PIGEON

- உரிமைகள் அனைத்திலும் சம வாய்ப்பளிப்போம்
- வாழ்க்கை வசதிகளை வகுத்துக் கொடுப்போம்
- இடைநின்ற வாழ்க்கையைப் புனரமைப்போம்
- எமது அன்றாட வாழ்வில் இவர்களையும் இணைப்போம்

இவர்கள் ஊனமுற்றவர்கள் என்பதற்குப் பதிலாக மாற்று வலிமை படைத்த வல்லுனர்கள் என்பதை மனதில் இருத்தி இவர்களுக்குள்ளே மறைந்து கிடக்கும் அளப்பரிய ஆற்றல்களை வெளிக்கொணரவும் அதற்குரிய வழிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் உண்மையுடன் செயற்படுவோமென இவர்களுக்கான இன்றய நாளில் எம்மை இணைத்துக் கொள்வோம்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக வலுவிழந்தவர்களின் மேம்பாட்டுக்காகவே தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துக் கொண்ட வெண்புறா நிறுவனம் இன்றய காலத்தில் தன் சிறகுகளை அகல விரித்து உலகின் சகல பாகங்களிலும் வியாபித்து நிற்பதொன்றே அதனது அர்ப்பணிப்பு நிறைந்த சேவைகளுக்கு கட்டியம் கூறி நிற்கின்றது. நிறுவனத்தின் வளர்ச்சிக்காக வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த அத்தனை இனிய நெஞ்சங்களையும் இத்தருணத்தில் நினைவு கூருவது சாலவும் பொருத்தமானதாக அமையும் என்பதில் தவறில்லை. அந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அதனோடிணைந்த பன்னாட்டுக் கிளைகள், ஆலய தர்மகத்தாசபைகள், பன்னாட்டு மனிதநேய அமைப்புக்கள், ஐக்கியநாடுகள் நிறுவனங்கள், மற்றும் தன்னார்வலர்கள் அத்தனை பேரையும் நெஞ்சார நினைத்து வாழ்த்தி விடை பெறுகின்றோம்.

(சி-13417)







# சர்வதேச மாற்றீடான வலுவுள்ளோர் தினம் - டிசம்பர் 3.2005



ஆசியுரை

நிமிர்ந்துயர நிறைவு பெற உளம் நிறைந்த வாழ்த்துக்கள்

எமது மாவட்டத்தில் மாற்றீடான வலுவுள்ளோரின் முழு மொத்த தேவைப் பாடுகளைஒழுங்கமைப்பதனை இலக்காகக் கொண்டு முழுமூச்சுடன் உழைத்து வரும் கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 15 வருட கால சேவை நிறைவு கண்டு உவகை கொள்கிறேன். இயற்கை காரணமாகவும், போர் அனர்த்தம் காரணமாகவும் பல்வேறு அங்க செயற்குறைவுக்குட்பட்டுப்போன எமது மாவட்டத்தினைச் சேர்ந்த 1825 மக்களின் வாழ்வில் உளவளத்துணையாகவும் சமூக பொருளாதார அபிவிருத்தியில் ஒத்துழைப்புவழங்கியும் முழுநிறைவாக வாழ்வைப்பெறும் சமநிலையை ஏற்படுத்தக்கண்டு நான் அகநிறைவடைந்திருக்கின்றேன். நிறுவன ரீதியாக இப்பிரச்சினையை ஒழுங்கமைத்து உரியதலைமைத்துவத்தை வழங்கி தொடர்சேவை புரிவதில் •இவ் அமைப்பின் இயக்குனர் அருட்சகோதரி லூட்ஸ் யோசேப் அவர்களின் திறனை உளமாரப் பாராட்டுகின்றேன்.

அதிகரித்து வரும் மாற்று வலுவுள்ளோரின் தேவைகளை எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து உயரக் கூடியவாறு திட்டமிட்டு தொடர்ச்சியாக முன்னெடுக்கும் இயக்குனர் சபைச் சமூகத்திற்கும் எனது பாராட்டுக்கள்.

மாற்று வலுவுள்ளோருக்குரிய நலனை அதிகரிப்பதில் நமது சமூகம் அதீத அக்கறையும் முன்னுரிமையும் வழங்கும் மனப்பாங்கை ஏற்படுத்த எல்லோரும் சேர்ந்து உழைக்க முயற்சி எடுப்போம். இச்சங்கம் அதற்கு உறுதுணையாக அமைந்து வழிகாட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நீண்ட தொடர் சேவை வழங்க எனது உளப்பூர்வ வாழ்த்துக்கள்.

நன்றி

**தி. இராசநாயகம்,**
**அரசாங்க அதிபரும்,**
**மாவட்டச் செயலாளரும்**
**கிளிநொச்சி மாவட்டம்.**

## மாற்றுவலுவுள்ளோர் யார்? அவர்களிற்குரிய உரிமைகள்

**மாற்று வலு உள்ளோர் யார்?**
முழுமையாகப் பார்வை இழந்தவர்
குறைந்த பார்வை உடையவர்
கேட்கும் மற்றும் பேசும் திறன் பாதிக்கப்பட்டவர்
இயக்கத்திறன் பாதிக்கப்பட்டவர்
தீவிரமனநோயினால் பாதிக்கப்பட்டவர்
மனவளர்ச்சிகுறைந்தவர்
தொழு நோயினால் ஊனமானவர்
40% பாதிக்கப்பட்டவரை மாற்று வலு உள்ளவர் எனலாம்
80% இற்கு மேல் பாதிக்கப்பட்ட ஒருவரை மிகவும் பாதிக்கப்பட்ட மாற்றுவலு உள்ளவர் எனலாம்.
குறைபாட்டை உறுதி செய்து சான்றிதழ் வழங்குவது அரச மருத்துவர் மட்டுமே

**ஊனம் வருவதற்குக் காரணங்கள்**
அக்கா மகள் மாமன் பிள்ளை போன்ற மிகவும் நெருங்கிய உறவில் திருமணம் செய்தல்
18 வயதிற்குள்ளோ 35 வயதிற்கு மேலோ தாய்மை அடைதல்
கருவை அழிக்க தங்களுக்குத் தெரிந்த வழிகளைப் பின்பற்றி அது முழுமை பெறாமல் போகுதல்
கர்ப்பகாலத்தில் சரியான மருத்துவப் பரிசோதனை, செய்யப்படாமை, மருத்துவர்களால் பரிந்துரைத்தல்
கர்ப்ப காலத்தில் சத்தான உணவு இல்லாமை
கர்ப்பிணிப் பெண்களை தொற்று நோய் தாக்குதல்
பயிற்சி பெறாத மருத்துவர்களைக் கொண்டு பிரசவம்பார்த்தல்
இராணுவ நடவடிக்கை

**மாற்றுவலு உள்ளோரின் இது உரிமைகள்**
பணி இடங்களைக் கண்டறிதல்
சிறப்பு வேலைவாய்ப்பு மையங்கள் அமைத்தல்
அரச பணிகள் பற்றிய விபரங்களைத் தொகுத்து சிறப்பு வேலைவாய்ப்பு மையங்களுக்கு வழங்குதல்
வேலை வாய்ப்புள்ள பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல்
வேலையில் சேர்வதற்கான வயது வரம்பைத் தளர்த்துதல்
எல்லா அரச நலத்திட்டங்களிலும் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கல்
ஊனத்தைக்காட்டி பதவி உயர்வை மறுத்தல் மற்றும் வேலையில் இருந்து நீக்குதலைத் தடுத்தல்

**எப்போது அமுலுக்கு வரும்?**
சம உரிமை?
கல்வி வாய்ப்பு?
பொழுது போக்கு வசதிகள்?
மருத்துவ வசதிகள்
வேலைவாய்ப்புகள்
தடைகளற்ற சூழல்
சலுகை விலையில் நிலம்

**மாற்றீடான வலுவுள்ளோர் சங்கம் சாதிப்பது என்ன?**
மாற்றுவலு உள்ளோர் தங்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தல்
சமுதாயத்தில் சமமதிப்பு மற்றும் உரிமைகளை வென்றெடுத்தல்
மாற்றுவலு உள்ளோருக்கான தனிப்பட்ட திறமைகளை வளர்த்தல் மற்றும் வெளிப்படுத்தல்
தங்களுடைய மற்றும் சமுதாய தேவைகள் பிரச்சினைகளை பிற சமுதாய அமைப்புக்களுடன் சேர்ந்து நிறைவேற்றுதல்
கிராமப்புறங்களிலுள்ள அனைத்து மாற்றுவலு உள்ளோர்களையும் ஒருங்கிணைத்தல்
ஊனம் வராமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்
மாற்றுவலு உள்ளோரின் முன்னேற்றத்திற்காக இயற்றப்பட்டுள்ள சட்ட திட்டங்களை அமுல்படுத்த வேண்டிய முயற்சிகளில் ஈடுபடுதல்
சமுதாயம் சார்ந்த புனர்வாழ்வுத் திட்டங்களில் மாற்று வலுவுள்ளோர் பயன்பெறும் வகையில் கல்வி, மருத்துவம், சிகிச்சை, உதவி உபகரணங்கள், தொழில் பயிற்சி, கடனுதவி, ஆலோசனைகள் போன்றவற்றில் அரச சாரா நிறுவனங்களின் உதவியோடு பயன்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
தேவைப்படும் நிதி ஆதாரங்களை திரட்டுதல்

**மாற்று வலுவுள்ளோரின் உரிமைகள் போக்குவரத்து பொது இடவசதி**
மாற்று வலு உள்ளோருக்கு இருக்கை வசதிகள்
கழிப்பறை வசதிகள்
அரசு அலுவலக அமைப்பு
சாலை எச்சரிக்கைக்குறிகள்
தடையற்றசூழல் உருவாக்கவேண்டும்.

**மாற்றுவலுவுள்ளோருக்கான தண்டனையை நீதிமன்றங்கள் மனித நேயத்துடன் அணுகுமா?**
மாற்றுவலுவுள்ள பிள்ளைக்கான கல்விக்கு தடை விதித்தால் சமஉரிமை, நீதி மன்றம் ஏறத்தயாரா? (1994ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க சட்டத்தின்படி)
கல்வி
பாதுகாப்பு
வேலை வாய்ப்பு

**இது ஊனமுற்றோரின் உரிமை**
மாற்றுவலுவுள்ளோர் சட்டத்தை அமுல்படுத்த சங்கமாய் கூட்டமைப்பாய் திரண்டெழுவோம்.

கிளி/மாற்றீடான வலுவுள்ளோர்
புனர்வாழ்வுச்சங்கம்
தனது பணியில் பதினைந்து ஆண்டுகளை
நிறைவு செய்வதைஇட்டு
பெரும் பூரிப்படைகிறது
1990 - 2005

**நாங்கள் இல்லாமல்; எங்களைப் பற்றி ஒன்றுமில்லை**

**அங்கத்தவர்கள் இயக்குனர்,ஆளுனர்சபை**
**பணியாளர்கள்,**
**கிளி/மாற்றீடான வலுவுள்ளோர்**
**புனர்வாழ்வுச்சங்கம்**
**யாழ்சாலை, கிளிநொச்சி.** (சீ-13418)

# கணினிப் பூங்கா மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பினரால் நடாத்தப்படும் இலவச மழலைகள் கணினிப் பூங்காவின் இரண்டாம் தொகுதி மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெற வுள்ளது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்ட பத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு சான் றிதழ் வழங்கும் நிகழ்வு நடை பெறவுள்ளது.

வன்னியில் முதல் முறையாக மழலைகளுக்கென்று தமிழீழ மாணவர் அமைப்பினரால் கிளிநொச்சி யில் ஆரம்பிக்கப்பட்ட இலவச மழலைகள் கணினிப் பூங்காவில் இரண்டாம் தொகுதிக் கற்கை நெறி யைப் பூர்த்தி செய்த மழலைகளுககே இச்சான்றி தழ்கள் வழங்கப்படவுள் ளன. (கு,தீ)

# உமையாள்புரத்தில் பனம் விதை நடுகை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனம் விதை நடுகைத் திட்டத்தின் கீழ் உமையாள்புரத்தில் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் பரந்தன் பிரதேசத்தின் உமையாள்புரம் கிராமத் தின் கலையரசி முன்பள்ளி வளாகத் தினுள்ளும் அதனையண்டிய வீதி யோரங்களிலும் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

மேற்படி பனம் விதை நடுகையில் உமையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், பரந்தன் நகர் கமக்கார அமைப்புச் செயலாளர், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர், முன்பள்ளி உதவி ஆசிரியர் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பனம் விதைகளை நடுகை செய்தனர். (கு,லோ)


## திருத்தம்
## கேள்வி அறிவித்தல் - 04

நேற்று வெளியான (02-12-2005) எமது வெள்ளிநாதம் வார இதழின் 20ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் கேள்வி அறிவித்தல் 04 (சி-13416) என்ற விளம்பரத்தின் அட்டவணையில் 02ஆம், 06ஆம், 07ஆம், 08ஆம், 09ஆம் வரிகளில் KN/NECORD - 11ED/02 என்பதற்குப் பதிலாக AG என்று பிரசுரமாகி விட்டது. தவறை ED என திருத்தி வாசிக்கவும்.


ஆறாம்மாத நினைவு அஞ்சலி

மலர்வு 02 - 03 - 1981

உதிர்வு 03 - 06 - 2005



அமரர் கிருஷ்ணபிள்ளை ஜெகன்
முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்
களனிப் பல்கலைக் கழகம்

பட்டம் பெற நீ புறப்பட பகற் கனவு பல கண்டோம்
விட்டமில்லா விருட்சமாய் விளங்குவாய் எனப்பார்த்தோம்.
பட்டமரம் போல புடைசாய்ந்து மடியில் விழுந்தாய்
மட்டில்லா மாணிக்கமே உன் நினைவுகளுடன் என்றும் நாம்.

4th வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்.

(6934)



MEDECINS DU MONDE

## Advertisement for Construction Engineer or Architect

MDM is a non-governmental organization intervening solely for humanitarian purposes.

MDM is working in the Mallavi hospital in the Mullaitivu District in the Northern Province of Sri Lanka

MDM is looking for a construction engineer or architect for the Mallavi hospital rehabilitation

**Responsibility**

The engineer is in charge of the supervision of 6 teams of masons,2 teams of carpenters and 2 teams of electricians and water supply.

The engineer is in charge of update the plan and designs the new construction.

**Qualifications**

* university Degree in engineering.or architecture.
* Strong work ethic and desire to improving health structure in Sri Lanka.
* Computer literacy in Microsoft Word, Excel, and Access.
* Excellent references.
* Excellent communication and organizational skills.

Excellent written and verbal English language

**To apply**

visit directly the MDM office in Mallavi from Monday 5 th December to Friday 9 th of December with a CV.

(7070)



## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

திட்டத்திற்கான கிராமங்களைத் தெரிவு செய்வதற்கான புள்ளிகள் கணணி மயப்படுத்தல் மூலமாக அளவிடக்கூடிய காரணிகளுக்கு 75 புள்ளிகளும் பிரதேச மட்ட வீடமைப்பு மீள் நிர்மாண உப குழு மூலம் அள விடமுடியாத காரணிகளுக்கு 25 புள்ளி களும் வழங்கப்பட்டபின் மாவட்ட ரீதியாக கிராம முன்னுரிமை பட்டியல் தயார் செய்யப்படும்.

மாவட்ட ரீதியாக தயாரிக்கப்பட்ட முன் னுரிமைப் பட்டியல் சுற்றாடல் தொடர்பான ஆய்வின் பின் மாவட்ட வீடமைப்புமீள் நிர்மாண ஒருங்கிணைப்புக் கண்காணிப்புக்குழுவின் தீர்மானத்தின்படி மாவட்ட முன்னுரிமை கிராமத் தெரிவு இடம்பெறும்.

எனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமத்தில் நீங்கள் வசிக்கின்றீர்களா? என்பதை உறுதிப்படுத் திக்கொள்ளுங்கள்

நீங்கள் பயனுகாரியாக தகுதியுடையவரா? என்பதை அறிய தொடர்ந்தும்



நாளைய பத்திரிகையை வாசியுங்கள்

(சி-13461)

# IMMEDIATE VACANCY

**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

## Position: Translator (1 Position)

Solidar is a consortium of Organizations of 12 European countries that supports a broad portFolic of projects. The Solidar network ın Sri Lanka comprises of three inter national NGOs- Arbeiter Samariter Bund (ASB), Norwegian people's Aid (NPA) and swiss Labour Assistance (SHA)

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, solidar Will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

We are currently looking for a qualified and dynamic person to fill the position of a translator (Tamil-English,English -Tamil)

The Translator Will have to carry out direct Verbal and written translations, be familiar with construction technologies and willing to spend most of his/her time in the field

Interested candidates MUST posses the minimum requirements stated below. please send in your applications to reach us on or before Firday ,9th December 2005

### Qualifications:

- Excellent communication skills
- previous experience with International HGOs
- Degree in translation is preferable.
- Computer literate (Microsoft Word and Excel both in tamil and English)
- Maximum age limit: 40 years

Interested person can submit their CV to: solidar construction Office, 160th mile post, Farm point, A9 Road, parnathan

Norwegian People's Aid
Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH

(சி.13411)



# இயல விற்பனை

**இடம்:- சிங்கர் சீர்மை அருகாமை யாழ். சாலை கிளிநொச்சி**

எவ்வகைப் பொருட்கள்:-
- ➤ இலத்திரனியல் பொருட்கள்
- ➤ அழகுசாதனப் பொருட்கள்
- ➤ புடைவைகள்
- ➤ உதிரிகள்

காலம்:-?

நாளை எதிர்பாருங்கள்.

(சி.13420)


# அறிவித்தல்

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் கற்கை நெறி

ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனியின் அனுசரணையுடன் கிளி. தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் கற்கை நெறிக்கு நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளோர் விபரம்:

1. கு.கதிர்ச்செல்வி, கனகபுரம்,
2. வே. சத்தியவாணி , அறிவியல் நகர்,
3. ஈ. புஸ்பலதா, கோணாவில்,
4. சி. வினோதினி, செல்வாநகர்,
5. இ. பத்மசிறி, கோணாவில்,
6. ஆ. மரியலோஜினி, கோணாவில்,
7. த. மதியழகன், உருத்திரபுரம்,
8. அ. ஆதவன் , உருத்திரபுரம்,
9. லோ. ஜீவகரன், கல்மடுநகர்,
10. த. தர்மராசா, பரவிப்பாஞ்சான்,
11. சி. அகிலன், செல்வாநகர்,
12. ஐ. பகிதரன், பெரியபளை,
13. இ. பிரதீபன், இராமநாதபுரம்,
14. ப. பிரதீபன், உடையார்கட்டு வடக்கு,
15. த. பிரதீபன், பூநகரி,
16. கு. கவிச்செல்வி, பரந்தன்,
17. சி. தவராஜா, உருத்திரபுரம்,
18. த. மனோகாந், மானிப்பாய் வடக்கு,
19. இ. குமரன், தருமபுரம்,
20. சி. மணிமாறன், வள்ளிபுனம்,
21. இ. ஜெயராசா, ஸ்கந்தபுரம்,
22. சி. ரமேஸ், அம்பிகா மருத்துவமனை அருகாமை,
23. கா குகப்பிரியா, பூநகரி,
24. அ. சுஜிதா, இராமநாதபுரம்,
25. சாந்தமெறில்டா, கோணாவில்,
26. தி. துகிலாதேவி, தருமபுரம்
27. ஆ. யாழினி, தருமபுரம்,
28. பா சுபாஜினி, முல்லைத்தீவு,
29. இ. சத்திய ரூபன்

மேற்குறிப்பிட்ட விபரங்களை உடையோரிற்கான கற்கை நெறி எதிர்வரும் 05.12.2005 (திங்கட்கிழமை) கிளி. தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் காலை 09.00 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆளணி மேலாளர்,
ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,
கிளிநொச்சி

(சி.13480)

# மலசலகூடப் பாவனையாளர்களிற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வவுனியா வடக்கு பகுதியில் புளியங்குளம் வடக்குப் பகுதி கிராமங்களான புதூர், பரசன்குளம், புதூர் சந்தி ஆகிய கிராமங்களில் டென்மார்க் அகதிகள் பேரவைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மலசலகூடப் பாவனையாளர்களுக்கான சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வு ஊட்டும் கருத்தரங்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில் மூன்று கிராமங்களைச் சேர்ந்த நாற்பதிற்கும் மேற்பட்ட மலசலகூடப் பாவனையாளர்களும், வவுனியா மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் இணைப்பாளர்களும் மற்றும் புளியங்குளம் வடக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் மலசலகூடம் சார்ந்த சுகாதார விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

# பெண்களுக்கெதிரான வன்முறை ஒழித்தல்; ஊடகங்களுக்கான கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

பெண்களுக்கு எதிரான சகல வன்முறைகளையும் ஒழித்தல் எனும் தலைப்பின் கீழ் ஒக்ஸ்பாம் நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்கள் அனைவரையும் சென்றடையும் நோக்கில் உள்ளூர் ஊடகங்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் ஐந்தாம் திகதியன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அன்றையதினம் பிற்பகல் 4.00 மணிமுதல் 5.00 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் உள்ளூர் ஊடகங்களை சேர்ந்தவர்களை கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட செயற்பாட்டுக் குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# ஓராண்டு நினைவில்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 | 13 |
| 04 | 11 |
| 1978 | 2004 |



## சாம்பசிவம் இரகுலதரன்

[ஆளுகை அலுவலர் வருவாய்ப்பகுதி வவுனியா மாவட்டம்]

அன்புச் செல்வமே ஆசை மகனே
பண்பால் உயர்ந்த பாசக் கணவனே
எம்மோடு இருந்ததை எண்ணித் துடிக்கின்றோம்
இறைவனோடு இருப்பதை எண்ணி வணங்குகின்றோம்.

வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

தாய், தந்தை,
மனைவி,
சகோதரர்கள்.

(7069)

# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 13 |
| 07 | 12 |
| 1940 | 2004 |



அமரர்
## இராசையா-கமலா
திதி-03-12-2005


அன்புத் தாயே!
வளமுடன் வாழ்வில் இன்முகம் காட்டி
பொறுமையைக் கடைப்பிடித்து எல்லோர் மனதிலும்
நிலைத்து நிற்கும் இதயத் தாமரையே
உங்கள் குயிலினும் இனிய குரலோசையை
எங்கே கேட்போம் இனி- என்றும்
உங்கள் அன்பு முகத்தை நெஞ்சில் நினைத்து
ஏங்குகின்றோம்- உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

280. பண்டார வன்னி,
ஒட்டுசுட்டான்.

மக்கள், மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி

(6953)

# சென்னை டெஸ்டில் புயல் விளையாடியது முதல் நாள் ஆட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது





இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. ஒருநாள் போட்டியை 6-1 என்ற கணக்கில் இந்தியா வென்றது.

அதைத்தொடர்ந்து இரு அணிகளும், மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளன. இதில் முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் நேற்றுத் தொடங்குவதாக இருந்தது.

ஆனால் வங்கக்கடலில் மையம் கொண்டிருந்த புயல் சென்னைக்கும், ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினத்திற்கும் இடையே கரையை நோக்கி நகர்ந்ததால் சென்னையில் நள்ளிரவு பலத்த மழை பெய்தது.

இதனால் சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் தண்ணீ தேங்கி நின்றது. ஆனால் ஆடு களம் மூடப்பட்டு இருந்ததால் மழையில் இருந்து பாதுகாக்கப்பட்டது.

நேற்றுக் காலை சிறிது நேரம் மழை நின்றதும் ஆடுகள பாதுகாப்பாளர்கள் சுமார் 60பேர் மைதானத்தில் தேங்கியிருக்கும் தண்ணீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். காலை 9.30மணிக்கு போட்டி நடுவர்கள் மைதானத்தை ஆய்வு செய்தனர்.

பின்னர் 10.30 மணிக்கு மைதானத்தை ஆய்வு செய்வோம். அதுவரை மழை வராமல் இருந்தால் மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் ஆட்டம் தொடங்கும் என்று அறிவித்தனர். இதைத்தொடர்ந்து மைதானத்தில் இருந்து தண்ணீரை வெளியேற்றும் பணி தொடர்ந்து நடந்தது.

ஆனால் காலை 10.20 மணியளவில் மீண்டும் மழை பெய்தது. இதனால் போட்டி நடுவர்கள் மைதானத்தில் நுழைய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது.

இதையடுத்து பகல் 11.30 மணிக்கு போட்டி நடுவர்கள் தங்களுக்குள் ஆலோசனை நடத்தினார்கள். ஏற்கனவே பெய்த மழையால் மைதானத்தின் எல்லைப் பகுதி சேறும் சகதியுமாகக் காணப்பட்டது.

தற்போது தொடர்ந்து மழை நிற்காமல் பெய்து வருவதால் போட்டிநடத்த சாத்தியமில்லாத சூழ்நிலை குறித்துப் பேசினர். எனவே சென்னை டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் முழுவதுமாக இரத்துச் செய்யப்படுவதாக அறிவித்தனர். நாணயச் சுழற்சியில் கூட இடம் பெறாது போட்டி இரத்துச் செய்யப்பட்டது.

நேற்றைய போட்டி இரத்துச் செய்யப்பட்டதால் இன்று முதல் கடைசி நான்கு நாள் நடக்கும் ஆட்டங்கள் அரைமணி நேரம் முன்னதாக காலை 9.00 மணிக்கு தொடங்கும் தினமும் குறைந்த பட்சம் 97 ஓவர்கள் பந்து வீசப்படும் என்று அறிவித்தனர்.

ஆனால் கடைசி நான்கு நாள் ஆட்டமாவது திட்டமிட்டபடி நடக்குமா? என்பது தெரிய வில்லை. ஏனெனில் வங்கக்கடலில் மையம்கொண்டிருந்த புயல் தற்போது தான் சென்னையை நோக்கி நகரத் தொடங்கி இருக்கிறது.

அப்படி பார்க்கும் போது ஞாயிற்றுக்கிழமை வரை மழை நீடிக்கும் வாய்ப்புள்ளதால் போட்டி நடைபெறுவதற்கு சாத்தியம் இல்லை. மழையால் தேங்கிய நீரை அகற்றவும்,மைதானத்தை காயவைக்கவும் ஒருநாள் தேவைப்படுவதால் திங்கட்கிழமையும் போட்டி நடக்காது என்றே தெரிகிறது. எனவே சென்னை டெஸ்ட் போட்டி முழுவதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## கால்பந்து சுற்றுப்போட்டி பதிவு செய்யக்கோரிக்கை


தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கிளி. மாவட்ட விளையாட்டுத் துறையினரால் வருடாவருடம் நடாத்தும் 11 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடாத்தப்படவுள்ளதால் வரும் 05.12.2005 இற்கு (திங்கட் கிழமை) முன்னதாக பதிவுகளை மேற் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். பதிவுகள் விளையாட்டுத் துறை நடுவப் பணியகத்திலும் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்திலும் நடைபெறும் என கிளி.மாவட்ட விளையாட்டுத் துறையினர் அறிவித்துள்ளனர். (கு)



சேப்பாக்கத்தில் வியாழக்கிழமை சக்தி பவுண் டேசனைச் சேர்ந்த ஊனமுற்ற மாணவர்களுடன் பேசி மகிழ்ந்தார் சச்சின் டெண்டுல்கர்,சச்சின் மட்டுமல்லாது,மற்றைய வீரர்களும் ஊனமுற்றோருடன் அளவளாவினர்.




## சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு அடுத்த வருடம் முதல் உயர்தர நடுவர்



அடுத்த வருடம் முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான உயர்தர நடுவர்களை சேர்த்துக்கொள்வதென சர்வதேச கிரிக்கெட்சபை தீர்மானித்துள்ளது.

தற்போது பணியாற்றும் ஸ்ரீவ் பக்னர், அலிம்தார் பில்லிபவுடன், டரில் ஹார்பர், டரில் கெயர், சைமன் டப்பல் ஆகியோருடன் மேலும் மூன்று பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.அதன்படி ஒருவர் ஒருவருடத்தில் 10 முதல் 12 டெஸ்ட் போட்டிகளிலும் 20 ஒருநாள் போட்டிகளிலும் பணியாற்றுவர் என ஐ.சி.சி. தலைவர் மல்கம் ஸ்பீட் தெரிவித்துள்ளார். அத்துடன் இது நியாயமான பணியமர்த்துகை என்றும் தெரிவித்தார். 2004 ஆம் ஆண்டு முதல் டெஸ்ட்போட்டியில் மூன்றாவது நாடுகளின் நடுவர் குழாம் ஒன்றை ஏற்படுத்தியதாகத் தெரிவித்த அவர் ஆயினும் இப்போது நடைபெறும் பாகிஸ்தான் இங்கிலாந்து அணிகளின் போட்டிகளில் தீர்வு கூறுவதில் பெரும் துன்பத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தார்.

பொதுவாகவே போட்டி நடுவர்கள் மத்தியஸ்தப்பணியை மிகக் கடினமாகவே புரிவதுடன் பலரதும் விமர்சனங்களுக்கும் ஆளாவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## மீண்டும் அணியில் இடம்பெறும் நம்பிக்கையுடன் உள்ளேன்



-ஜெயசூரிய

இந்தியாவுடனான டெஸ்ட் போட்டித்தொடர் அணியில் தான் இணைக்கப்படாவிட்டாலும், எப்போதாவது இணைத்துக்கொள்ளப்படும் நம்பிக்கையுடன் இருப்பதாக இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு நாள் போட்டியில் நன்கு பிரகாசிக்கத் தவறியதால் ஜெயசூரியா இந்த அணியில் இடம்பெறவில்லை. எனினும், தனது பெரும் எதிர்பார்ப்பு வரும் 2007ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிக்கான அணியில் இடம்பெறுவதே என்றார்.

ஜெயசூரியா தற்போது முதுகில் ஏற்பட்ட காயத்தால் அவதியுறுகிறார். எனினும் அந்தக் காயம் தனது திறமைக்கு இடையூறாகாது என்று கூறியுள்ளார்.

## தோல்வியை தவிர்க்குமா இங்கிலாந்து வெற்றித் துடிப்புடன் களத்தில் பாகிஸ்தான்





முகமட் யூசுப் அடித்த இரட்டை சதம் அக்மல் அடித்த சதம் லாகூர் டெஸ்டில் பாகிஸ்தானுக்கு வலுவான முன்னிலையைப் பெற்றுக்கொடுக்க இங்கிலாந்து அணி தோல்வியை தவிர்ப்பதற்கு போராடுகிறது.


முதல் இனிங்சில் இங்கிலாந்து 288 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் முதல் இனிங்சை தொடக்கிய பாகிஸ்தான் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் நான்கு விக்கெட் இழப்பிற்கு 185 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பின்னர் மூன்றாம்நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் முகமட் யூசுப் அக்மலின் ஆட்டத்தில் புத்தெழுச்சி பெற்றது. இவர்கள் இங்கிலாந்தின் வேகப்பந்தை சிதறடித்து ஓட்டத்தைக் குவித்தனர். மூன்றாம் நாள் நிறைவில் 446 ஓட்டங்களைக் குவித்ததுடன் ஆட்டமிழக்காது சதத்தையும் பூர்த்திசெய்தனர்.இதனால் இங்கிலாந்தை விட 158 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற பாக் நான்காம் நாளான நேற்று முகமட் யூசுப் இரட்டைச் சதம் அடிக்க பாகிஸ்தான் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 636 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடை நிறுத்தியது.



முகமட் யூசுப் 223, அக்மல் 154, இன்சமாம் 97 ஓட்டங்களை அதிகபட்சம் பெற்றனர். பந்து வீச்சில் கொக்காட், பிலிங்நட் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பிளின்டொப், ஹார்மிசன், உடல் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.348 ஓட்டங்கள் பின்னிலையில் இருக்கும் இங்கிலாந்து தற்போது துடுப்பாடி வருகிறது அவ் அணி நேற்றைய ஆட்டநேர நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. போட்டியின் இறுதி நாளான இன்று தொடர்ந்தும் இங்கிலாந்து வீரர்கள் துடுப்பாட்டத்தில் நிலைத்திருந்தால் மாத்திரமே தோல்வியைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் இங்கிலாந்து பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

## சாதகமான மைதானங்களை கங்குலி உருவாக்கினார்



ஸ்ரீவ்வோ


இந்தியாவில் போட்டி நடக்கும் போது தமக்கு சாதகமான மைதானங்களை கங்குலி உருவாக்கினார் என அவுஸ்.முன்னாள் அணித் தலைவர் ஸ்ரீவ்வோ குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது ஸ்ரீவ்வோ எழுதிய என் இராட்சியத்திற்கு வெளியே என்ற வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் கடுமையாக அவர் கங்குலியைக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இந்தியாவில் சர்வதேசப் போட்டிகள் நடைபெறும் போது ஆடுகள வடிவமைப்பாளருடன் கலந்து பேசி இந்திய அணிக்கு சாதகமாக மைதானத்தை வடிவமைக்கும்படி கங்குலி வற்புறுத் துவார். இதுவும் ஒரு வித்தியாசமான சூதாட்டம் ஆகும்.

ஏனெனில் ஆடுகள வடிவமைப்பாளர் தனது முழுத்திறமையையும் பயன்படுத்தி கால சூழ்நிலைக்கு ஏற்ப மைதானத்தைத் தயார் செய்து விளையாட்டு வீரர்களின் கையில் கொடுக்க வேண்டும். அதில் நடக்கும் போட்டிதான் உண்மையானது. ஆனால் ஆடுகளத்தை சாதகமாக மாற்றி அமைப்பது ஏமாற்று வேலை ஆகும். நாணயச்சுழற்சி செய்யும் போதும் தாமதமாக வந்தும் போட்ட பிறகு என்னைக் கண்டுகொள்ளாமல் தனியாகச் சென்றும் கங்குலி தொடர்ந்து என்னை அவமானப்படுத்தினார். எப்போதும் தன்னை மிகவும் உயர்ந்தவர் என்று நினைத்துக் கொள்ளும் அவர்,தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனக்கு சாதகமாக மடத்தனமான சில விதிகளை உருவாக்கிக் கொண்டார் எனவும் ஸ்ரீவ்வோ தெரிவித்துள்ளார்.

**சிந்தனைக்கு**



நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒரே தேசிய சக்தியாக - அணி திரண்டு எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ள வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# தவறான மதிப்பீடு

நீர்வேலியில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினால் இரு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். மற்றுமொரு இளைஞன் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் உள்ளார்.

தமது தோட்டங்களுக்குப் பசளை இடுவதற்கான இலை, குழைகளை உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்த இவர்கள் வீதி ஓரத்தில் நின்று நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த வேளை இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் இடம்பெற்றதற்கு அண்மையாக இராணுவக் காவலரண்கள் இருந்ததோடு, துப்பாக்கிச்சூடு நடாத்தியவர்கள் -இக்காவலரண்களைத் தாண்டிச் சென்றமையும் இப்படுகொலைகளை சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பே மேற்கொண்டது என்பதை ஊர்ஜிதம் செய்யப் போதுமானதாகும்.

இதேவேளை நேற்றுப்பிற்பகலில் -அதாவது இப் படுகொலைகள் இடம் பெறுவதற்கு முன்பதாக , கிளிநொச்சியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டைச் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடாத்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆக்கிரமிப்புப்பகுதியில் அதிகரித்துள்ள வன்முறைகள் பற்றித் தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தார்.

இதுதொடர்பாக இச்சந்திப்பின் போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு எத்தகைய பதில் கூறினாரோ என்பது அறியப்படவில்லை. ஆயினும், கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊடகங்களுக்குப் பின்னர் வழங்கிய தகவலில் வடக்கு-கிழக்கில் பதற்ற நிலை தணிந்துள்ளது என்ற ரீதியிலேயே கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஆனால் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுத்தலைவர் எதன் அடிப்படையில் இதனைக் கூறினாரோ தெரியாது. ஆனால் அவர் இவ்விடயத்தில் தவறானதொரு மதிப்பீட்டிற்கு வந்துள்ளார் என்பதே சரியானதாகும். அதாவது வடக்குக் கிழக்கில் கடந்த ஒருவார காலத்தில் சற்றுத்தணிந்திருந்த வன்முறையைக் கொண்டு அவர் இந்தத் தவறான முடிவிற்கு வந்திருத்தல் வேண்டும்.

ஆனால் கடந்த வாரத்தில் வன்முறைகள் இடம்பெறாமல் போனமைக்குக் காரணங்கள் உள்ளன. அதாவது, மாவீரர் நாள் நிகழ்வுகளும் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளும் கடந்த வாரத்தில் வந்திருந்தமையே இதற்கு காரணமாகும்.

அதிலும் குறிப்பாக மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் இடம் பெறும் வாரத்தில் தமிழ் மக்கள் எப்பொழுதும் எழுச்சிகரமாகவும், உணர்ச்சிக் கொந்தளிப்புடனும் காணப்படுதல் வழமையாகும். இக்காலப்பகுதியில், தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டுதல் பெரும் விளைவுகளுக்கு காரணமாகும் என்பது சிங்கள ஆயுதப் படைக்கும் அதன் அடிவருடிகளான தேச விரோதக்குழுக்களுக்கும் நன்கே தெரியும்.

இதன் காரணமாக இக்காலப்பகுதியில் இவர்கள் தமது வன்முறைகள், மக்களைச்சீண்டும் நடவடிக்கைகளை சற்றுக்குறைத்துக் கொண்டு முகாம்களுக்குள் முடங்கிவிடுவதுண்டு. இந்த வகையிலேயே கடந்த வாரத்திலும் அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டார்கள். இதனால் வன்முறைகள் குறைந்தது போன்றும் அமைதியானதொரு சூழ்நிலை நிலவுவது போன்றதுமொரு சூழ்நிலை நிலவியது. இதனை வைத்தே கண்காணிப்புக்குழுவும் வன்முறைகள் தணிந்து, பதற்றமற்றதொரு சூழ்நிலை நிலவுவதாக முடிவிற்கு வந்திருத்தல் வேண்டும்.

ஆனால் உண்மையில் இக்காலப்பகுதியை சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பும்,தேச விரோதக்குழுக்களும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான அவதானிப்புக்காலமாகவே பயன்படுத்திக்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, மாவீரர் நாள் போன்ற எழுச்சி நாள் நிகழ்வுகளில் முன்னின்று செயற்படுபவர்கள் யார் யார் என்பதை அவதானிப்பதற்கும் அவர்களைக் குறி வைப்பதற்குமே அவர்கள் இக்காலப்பகுதியைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இதன் பின்னர்-அதாவது தமிழ் மக்களின் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்று மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியதும் தமது நடவடிக்கைகளை இவர்கள் ஆரம்பிக்கின்றனர். இது தனியாக மாவீரர் நாள் நிகழ்வு போன்ற விடயத்தில் மட்டுமல்ல, தமிழ்மக்கள் கைக்கொள்ளும் அனைத்து எழுச்சி நிகழ்வுகளின் பின்னரும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகவே உள்ளது.

சுருக்கமாகக் கூறுவதானால் தமிழ் மக்கள் அணிதிரண்டு உணர்வெழுச்சியுடன் பங்கேற்கும் நிகழ்ச்சிகளின் போது ஒதுங்கிக்கொள்ளும் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையும் தமிழின விரோதக்குழுக்களும் இந்நிகழ்வுகள் முடிவுற்றதும் தமது வன்முறைகளை அச்சுறுத்தல்களை ஆரம்பிக்கின்றன என்பதே கடந்த கால அனுபவமாகும். ஒருவாரமோ அன்றி சிலநாட்களோ நிலவும் வன்முறைகளற்ற நாட்களை அடிப்படையாகக்கொண்டு வன்முறை தணிந்துள்ளது, பதற்றநிலை தணிந்துள்ளது என கண்காணிப்புக்குழு முடிவிற்கு வருமேயானால் அது ஏமாற்றமடைய வேண்டியே இருக்கும். ஏனெனில் அந்நாட்களை சிறிலங்கா புலனாய்வுத்துறை இலக்குகளைத் தேடுவதற்கான காலமாகவே பயன்படுத்துகின்றது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து புலிகள் எமக்கு கட்டளையிட முடியாது

**- சிறிலங்காவின் ஊடக அமைச்சர் கூறுகிறார்**

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக எங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டளையிட முடியாது என்று சிறிலங்கா ஊடக அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் அநுர பிரியதர்சன யாப்பா கூறியதாவது;

மகிந்த ராஜபக்ஷ கூட்டியுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டம் அடுத்த வாரம் நடைபெற உள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அனைத்துக் கட்சிகளினது ஆலோசனைகளும் கோரப்பட்டுள்ளது.

குறுகிய கால இடைவெளியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியிருக்கிறார். சிறிலங்கா அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகள் கட்டளையிட முடியாது.

மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்ட காலம் எடுத்துக்கொண்டு அனைத்து அரசியல் கட்சியின் யோசனைகளை ஆழ்ந்து பரிசீலித்து இறுதித் தீர்வு காண்பார். இவையெல்லாம் உடனடியாக நடைபெறாது.

எதிர்வரும் எட்டாம் திகதி பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட உள்ள வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மகிந்தவின் கொள்கைகள் வெளிப்படுத்தப்படும் என்றார் அநுர பிரியதர்சன யாப்பா.

# நான்கு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் தரப்பிற்குத் தாவ முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர், அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்காக அரச தரப்பு முக்கியஸ்தர்களுடன் இரகசியப் பேச்சுக்களில் மிக மும்முரமாக இறங்கியுள்ளனரெனத் தெரியவருகின்றது.

கொழும்பு, இரத்தினபுரி, அம்பாறை, புத்தளம், ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறான இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருவதாக தெரியவருகின்றது.

இவர்கள் வெகுவிரைவிலேயே ஆளும் கட்சிப்பக்கம் சாயலாம் என தெரியவருகின்றது. ஆளும் கட்சிக்குள் உள்வாங்குவது தொடர்பில் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இறுதியான முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை என்று சனாதிபதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை ஆளும்கட்சிக்குள் கொண்டுவருவதை ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் இணக்கத்தையும். ஆலோசனையையும், பெறுவதற்கு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# ஊடகவியலாளரை இனி அச்சுறுத்தமாட்டேன்; நீதிமன்றில் பிரதியமைச்சர் மேர்வின் உறுதிமொழி

எந்தவொரு ஊடகவியலாளரையும் இனிமேல் அச்சுறுத்தவோ துன்புறுத்தவோ மாட்டேன் என்று சிறிலங்காவின் தொழில் விவகாரங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றில் உறுதியளித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஜனித செனவிரத்னவிற்கு மரண அச்சுறுத்தல் விடுத்தது தொடர்பாக பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிரான முறைப்பாட்டை நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்ற நீதிபதி கிஹான் பலபிட்டிய விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

2001 ஒக்ரோபர் மாதம் 22 ஆம் நாள் அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் மேர்வின் சில்வா உட்பட்ட பத்துப் பேரைக்கொண்ட குழுவினர் இரண்டு வாகனங்களில் திவயின பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று ஊடகவியலாளர் ஜனித செனவிரத்னவை தகாத வார்த்தைகளில் விமர்சித்து தாக்குவதாகவும் கொலை செய்வதாகவும் அச்சுறுத்தல் விடுத்திருந்தார்கள் என்று மேர்வின் சில்வாவிற்கு எதிராக முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்த வழக்கின் விசாரணையின்போது பத்திரிகை அலுவலகங்களிற்கு அத்துமீறிப் பிரவேசிக்க மாட்டேன் என்றும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்த மாட்டேன் என்றும் பிரதியமைச்சர் உறுதியளித்ததால் இந்த வழக்கை சமரசமாக நிறைவு செய்வதற்கு நீதிபதி முடிவு செய்தார்.

# கதிர்காமர் கொலை வழக்கில் ஞானக்கோன் கைது; நீதிமன்றில் ஆஜராக பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு

கதிர்காமர் வழக்கில் தமிழ் வர்த்தகர் ஞானக்கோன் கைது செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் எதிர்வரும் ஐந்தாம் திகதி பொலிஸ்மா அதிபரையும் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கள இயக்குநரையும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

கதிர்காமரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவரென சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள ஞானக்கோனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடக்கோரி அவுஸ்திரேலிய நாட்டவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

சிறிலங்காவில் தற்போது வசிக்கும் அவுஸ்திரேலிய நாட்டவரான டேனியல் டி ஸ்டெட் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

சார்ள்ஸ் ஞானக்கோன் அவுஸ்திரேலிய நாட்டவர், வர்த்தகர். கடந்த ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி எனது வீட்டிற்கு வந்த ஆறு பொலிஸ் அதிகாரிகள் எவ்விதக் காரணமும் தெரிவிக்காமல் ஞானக்கோனை கைது செய்து அழைத்துச் சென்றனர் என டேனியல் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட நாளிலிருந்து சார்ள்ஸ் ஞானக்கோன், கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தடுத்து வைத்தல் உத்தரவிற்கமைய தடுத்து வைக்கப் பட்டுள்ளார் எனவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அதனால் சார்ள்ஸ் ஞானக்கோனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுமாறும் சார்ள்ஸ் ஞானக்கோனை விடுதலை செய்யுமாறும் மனுதாரர் கோரியிருந்தார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிபதிகளான எஸ்.ஐ.இடாட், ரஞ்ஜித் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வங்கிகள் ஊடாக வழங்கத் திட்டம்

(கொழும்பு)

ஓய்வூதிய கொடுப்பனவுகளை வங்கிகளூடாக வழங்கும் புதிய செயல் திட்டத்தினால் ஓய்வூதியம் பெறுவோருக்கு எந்த கஷ்டங்களும் ஏற்படாது என அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்தப் புதிய முறைமை ஆரம்பிக்கப்படவுள்ளதை முன்னிட்டு ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தினருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வங்கிகளூடாக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதால் எதுவித தாமதமும் இன்றி அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஓய்வூதியம் பெறுவோருக்கு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட வேதனம் முன்னைய சம்பளத்துடன் சேர்க்க இந்த புதிய முறை இலகுவானது எனவும் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (32)

# பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

ஹட்டன் டன்பார் தோட்டத்தில் உள்ள தரிசு நிலங்களை பயன்படுத்தி வெளியாரின் குடியேற்றம் இடம்பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனையடுத்து தோட்டத் தொழிலாளர்கள் கடந்த இரண்டு நாட்களாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் தோட்ட நிர்வாகம் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளதாக தெரியவருகின்றது.

# சந்திரிகாவுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

# பிரதம நீதியரசர் கடும் விசனம்!

(கொழும்பு)

முன்னாள் சனாதிபதி டி.பி. விஜய துங்கவின் பொருட்டு ஆறு மில்லியன் ரூபா மட்டும் ஒதுக்கப்பட்ட வேளை முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொருட்டு ஏன் 29 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளமை எந்த அளவிற்கு நியாயமானது? என பிரதம நீதியரசர் சரத் என். சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

அடுத்த வருடத்திற்கான அர சாங்க சேவை மற்றும் பல்வேறு திட் டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் அரசியல் அமைப்பு சார் தன்மை குறித்து ஆராய்ந்த போதே பிரதம நீதியரசர் சரத் என். சில்வா இவ்வாறு கேள்வி எழுபபினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பத்துப் பேருக்கு 29 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ள அதே வேளை முன்னாள் சனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கவிற்காக 29 மில்லி யன் ரூபாவிற்கும் அதிகமான தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியி ருந்த 2006 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மற்றும் அர சாங்க வருமானங்களைப் பாதுகாப்ப தற்கான விசேட நானாவித சட்ட மூலத தையும் ஆராய்ந்து பார்த்த பின்பே இந்தக் கேள்வியை எழுப்பியதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்ட மூலங்கள் தொடர் பான உயர் நீதிமன்ற விசாரணைகள் நேற்று நிறைவடைந்த வேளையில் இது தொடர்பான தீர்ப்பை சனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்க உள்ள தாகவும் அவர் மேலும் கூறினார்.(32)

# இனந்தெரியாதோர் தாக்குதல்

# காத்தான்குடி பி. செயலர் காயம்!

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பிரதேச செயலர் ஏ.எல்.எம்.பளீல் அவரது அலுவல கத்தில் வைத்து நேற்று மதியம் 12.45 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மிக ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

அவர் தனது அலுவலகத்தில் கடமையில் இருந்த போது அங்கு உந்துருளியில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளே இவரின் அலுவலகக் கண்ணாடி ஊடாக இவர்மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டு ள்ளனர்.

கற்பிட்டி நற்பிட்டிமுனையினை சொந்த இடமாகக் கொண்ட இவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக காத்தான்குடி பிரதேச செயலராக கடமை யாற்றி வந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் பல நூல் களை எழுதிய எழுத்தாளருமாவார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டினைப் பற்றிய மேலதிக விசாரணைகளை காத்தான்குடி சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# ஈ.பி.டி.பி யினர் வாகனம்மோதி

# ஒரே குடும்பத்தில் ஐவர் படுகாயம்

## -இருவரின் நிலை கவலைக்கிடம்

யாழ். தீவகப்பிரதான வீதியிலுள்ள பண்ணைச்சந்திக்குச் சமீபமாக நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாண மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாலத்தைக்கடக்க முனைந்த முச்சக்கர வண்டிமீது எதிரே வந்த ஈ.பி.டி.பி யினரின் பிக்கப் வாகனம் மோதியதை அடுத்தே இந்தச் சேதம் இடம்பெற்றுள்ளது. நாவாந்துறைச் சந்தியைச் சேர்ந்தவர்களான றோஷலின் (வயது-31), அன்னமேரி (வயது-36), உதயகுமார் (வயது-34), கிளியோப் பற்றா (வயது-32), லூட்ஸ்ன் ஆகிய ஐவருமே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரது நிலைமை மிக மோசமாக உள்ளதால் அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின அதிதீவிர சிகிச் சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை வீதி வழியாக பய ணங்களை ஏற்றிவந்த முச்சக்கர வண்டி பண்ணைச்சந்தியைக் கடந்து கோட்டை பின் வீதியில் நுழைய முற்பட்டவேளை பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்புடன் வேகமாக வந்த ஈ.பி.டி.பி வாகனம் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியைக்கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டிமீது மோதியது.

இதனையடுத்து சம்பவ இடத் திற்கு வந்த பொலிசார் விபத்துக்கான தடயங்களை அகற்ற முற்பட்ட வேளை பொது மக்களுக்கும், பொலிசாருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனைத் தவிர்ப் பதற்காக அப்பகுதியில் ஏராளமான கடற்படையினர் குவிக்கப்பட்டு பொது மக்களை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் எதுவிதமான அசம்பா விதங்களும் இடம்பெறவில்லை.

(32,33,28)

## சனாதிபதி மாளிகையிலிருந்து சந்திரிகா வெளியேற்றம்

(கொழும்பு)

முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறியுள்ளார். தமது பொறுப்புக்களையும் உத்தியோக பூர்வமாக புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார். இதனையடுத்து சந்திரிகாவின் அலுவலகம் பிறிதொரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தனது எதிர்கால நடவடிக்கைகள் அந்த அலுவலகம் ஊடாகவே நடை பெறப்போவதாக சந்திரிகாகுமார துங்க தெரிவித்துள்ளார். முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வின் உத்தியோக பூர்வகாரியாலயம் நேற்று முதல் கொழும்பு 07, பௌத் தாலோக மாவத்தையிலுள்ள பண்டா ரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாலாம் இலக்க அறை யில் இயங்கவுள்ளது. முன்னாள் சனாதிபதியின் செயலாளராக பி.திசா நாயக்க செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலை அநுராதபுரச் சந்தியில்

# சிங்கள வணிகர் சுட்டுக்கொலை!

திருகோணமலை அநுராதபுரச்சந்தியில் உள்ள சந்தையில் வைத்து நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீன் வணிகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அநுராதபுரச்சந்திக்கு அருகில் உள்ள சந்தையில் மீன் வணிகம் நடத்தி வரும் 'கருவா' என்ற சேனசிறி என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவரின் கழுத்தில் ஐந்து துப்பாக்கிச்சூடுகள்பட்டு படுகாய மடைந்த நிலையில் அவசரமாக திருகோணமலை பொது மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

## மக்கள்...

களஞ்சியத்திற்கு வந்து சேர்ந்ததாகவும், மேற்படி மாவில் புழு, வண்டுகள் இருப்பதனை உலக உணவுத் திட்ட உதவிக்களஞ்சியக் காப்பாளரினால் இனங்காணப்பட்டதனைத் தொடர்ந்து மேற்படி மா மூடைகள் அனைத்தும் அதே பாரவூர்தியில் கொழும்பிற்கு மீண்டும் நேற்றையதினம் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தெரியவந்துள்ள துடன் இது சம்பந்தமாக உதவிக் களஞ்சிக்காப்பாளரினால் சகல உயர் அதிகாரி களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

## படையினர் ...

வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம் எந்தவொரு காரணமுமின்றி இவர் மீது சிறிலங்காப் படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. படுகாயமடைந்த இளை ஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (28,33)

## டிசம்பர்...

நாளுடன் ஓய்வுபெற்று பதவி நீடிப் புப்பெற இருந்த இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட ஓய்வுபெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளார்.

இதையடுத்து புதிய இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா நியமிக் கப்பட்டுள்ளார். இவருக்கும் எதிர் வரும் 17ஆம் திகதியுடன் 55 வயது பூர்த்தியடைகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுட னான இருதசாப்த கால யுத்தத்தில் முக்கிய தளபதியாக சிறிலங்கா இராணுவத்தில் பணியாற்றியவர் சரத் பொன்சேகா.

1970 ஆம் ஆண்டு சிறி லங்கா இராணுவத்தில் இணைந்த இவர் யாழ்மாவட்ட இராணுவத்தளபதியாகப் பணியாற்றியுள்ளார். இங்கிலாந்து, இந்தியா,பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற வர். சிறிலங்கா அரசின் உயரிய பதக்கங்களையும் பெற்றவர்.

## சுற்றிவளைத்த...

குறிப்பிட்ட நிகழ்வைத் தொடர்ந்து உரிய இடத்திற்கு வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ. மாவட்டப் பொறுப்பாளர் சர்வதேச மாணவர் பேரவைப் பிரதிநிதிகளு டன் கலந்துரையாடிச் சென்றுள்ளார். குறிப்பிட்ட இடத்தில் இராணுவத்தின ரின் வாகனங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வீதிகளில் மாணவர் களும் இளைஞர்களும் ரயர்களைப் போட்டு எரித்துள்ளனர் . (41)

## படையினரின்...

காத்து நின்றதுடன் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் அப்பகுதியில் நிலைகொண்டிருந்தபோதும், இறுதி வரை இப்பகுதியூடாக யாழ்ப்பாணம் செல்ல முடியாமல் படையினர் மீண் டும் மறவன்புலோ படைமுகாம் நோக்கி சென்றதாகத் தெரியவரு கின்றது.

நேற்று முன்தினம் நீர்வேலிப் பகுதியில் இருஇளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று யாழ்.குடாநாடெங் கும் இடம்பெற்ற ஹர்த்தாலின் போதே படையினர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

(28)

## தேசவிடுதலை...

கொண்டிருந்தனர். .

இதன் போது அண்மைக் கால மாக யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் யுத்த நிறுத்த மீறல், மற்றும் மக்களை அச்சுறுத்தும் நடவடிக் கைகளில் சிறிலங்கா இராணுவப் புல னாய்வுத் துறையினரும், அவர்க ளோடு சேர்ந்தியங்கும் ஈ.பி.டி.பி ஒட்டுக் குழுவினரும் ஈடுபட்டுள்ளமை விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த மாதம் 20 திக திக்குப் பின்னர் நீர்வேலி, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பங்கள் சுட்டிக் காட்டப்பட்டது.

இச்சந்திப்பு நடைபெற்று சில மணி நேரங்களிலேயே மீண்டும் யாழ். நீர்வேலியில் இரண்டு இளைஞர்கள் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டும், ஒருவர் படுகாயத்திற்குள்ளாக்கப்பட்டு முள்ளனர். இச்சம்பவங்களானது எமது தேசவிடுதலைப் பற்றா ளர்களை அழித்தொழிக்கும் நய வஞ்சகச் செயல்களாகவே கருதுகின் றோம்.

எனவே இச் சம்பவங்களை மிக வன்மையாக யாழ். மாவட்ட அரசியல் துறை கண்டிப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் தொடரும் நாட்களில் இடம்பெறாது இருக்க ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளை விரைவு படுத்துமாறு வேண்டுகின்றோம்.

## குடாநாட்டில்...

தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இதேமுகாம் மீது மாலை 3.30 மணியளவில் மற்றொரு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மேலும் ஒரு சிறிலங்கா இராணுவச்சிப்பாய் படு காயமடைந்தார். சாவகச்சேரி பிரதேச சபைக்கு எதிர்ப்புறம் உள்ள சிறி லங்கா இராணுவ முகாம் மீது மாலை 4.30 மணியளவில் மூன்றாவது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் எவருக்கும் காயமேற்படவில்லை.

இந்தத் தொடர் தாக்குதல்களை யடுத்து சாவகச்சேரியில் பதற்ற சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி முழுமைக்கும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வீடுவீடாக சோதனை நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் தீவிரப்படுத்தினர்.

இதேவேளை கைதடிச் சந்திக்கு சமீபமாக இராணுவக்காவலரண் ஒன் றின் மீது நேற்று மாலை 5.30 மணி யளவில் இனந்தெரியாதோரால் கைக் குண்டொன்று வீசப்பட்டது. இக் கைக்குண்டு இராணுவக் காவலர ணுக்கு வெளியே விழுந்து வெடித் ததில் வீதியால் சென்ற இளை ஞர்கள் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் நுணாவில் கிழக்கு சாவகச்சேரி யைச் சேர்ந்த சிவராஜா கனகரூபன் (வயது 18), எஸ்.அருந்தா (வயது-21), என்ற இருவருமே காயமடைந் தவர்களாவர். உந்துருளியில் வந்த இனந்தெரியாதவர்களே இவ்வாறு கைக்குண்டை வீசிவிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

மேலும் தென்மராட்சி அல் லாரைப்பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீதும் நேற்று இரவு 7.00மணியளவில் இனந் தெரியாதவர்களினால் கைக் குண்டு வீசப்பட்டது.இச்சம்பவத்தில் காவ லரணில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் காய மடைந்தார்.

இதேவேளை யாழ். நகர் பிற வுண் வீதிச்சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீதும் நேற்றிரவு 7.00 மணியளவில் இனந்தெரியாதவர்களினால் கைக்குண்டு வீசப்பட்டதில் வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். இதில் ஏழாலை தெற்கைச் சேர்ந்த சண்முகதாஸ் சிவனேசன் (வயது 35) என்பவரே காயமடைந்த வராவார்.

இதேவேளை யாழ்.குப்பிளான் சந்திக்கு சமீபமாகவுள்ள இராணு வக் காவலரண் ஒன்றின் மீதும் நேற்றி ரவு 8.00 மணியளவில் இனந்தெரி யாதவர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம் பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்றன. (33,28)

## இளைஞர்கள்...

ளான ஈ.பி.டி.பி மற்றும் இரா ணுவத்தினரும் இணைந்து மேற் கொண்டுள்ளார்கள். இதனைக் கண் டித்து இடம்பெற்ற பூரண ஹர்த் தால் காரணமாக யாழ்ப்பாணத்தின் சகல நடவடிக்கைகளும் முடக்கப் பட்டன

பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. அரச அலுவலகங் களுக்கு குறிப்பிட்ட சிலர் மட்டுமே சமுகம் கொடுத்த போதிலும் அவர் களும் சில மணித்தியாலத்தில் அலு வலகங்களில் இருந்து வெளியேறி னார்கள்.

இலங்கை போக்குவரத்து சேவை பேருந்துகள், தனியார் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடவில்லை. அனைத்து வர்த்தக நிலையங்களும் பூட்டப் பட்டன.உயர் கல்வி நிலையங்கள் இயங்கவில்லை. வைத்திய சாலைகளிலும் நோயாளார்களின் எண்ணிக்கை குறைவாகக்காணப் பட்டது.

சில இடங்களில் இராணுவத் தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்ட துடன் இதனால் பதற்றமான நிலை காணப்பட்டது.

மேற்படி படுகொலை சம்பவத் தால் ஆத்திரமடைந்த மக்கள் பிர தான வீதிகள், முக்கிய சந்திகள், வீதிக ்கருகே கற்கள், மரங்கள் மின்க ங்கள், என்பவற்றைப் போட்டு தித் தடையை ஏற்படுத்திய துடன் வீதிகளில் ரயர்களைப் போட் டும் எரித்தனர். இதனால் பிரதான வீதிகளுடனான போக்குவரத்து பாதிக் கப்பட்டதுடன் இராணுவத்தின் இரா ணுவ முகாம்களுக்கு அருகிலும் ரயர் களைப் போட்டு எரித்தனர்.

வடமராட்சி,தென்மராட்சி,வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணம் போன்ற அனைத்துப் பிரதேசங்களிலும் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தனால் இராணுவ வாகனங்களினதும் இராணுவத்தினரும் மற்றும் பொலிசாரது நடமாட்டங்கள் குறைந் திருந்ததுடன் படையினர் படைமுகாம் களுக்குள் முடங்கினர்.

குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங் களிலும் நேற்று இயல்புநிலை முற் றாகப்பாதிக்கப்பட்டிருந்தன. (41,கீ,33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.